# சோவியத் நாடு

## சோஷலிசம்

## தத்துவமும் நடைமுறையும்

சோவியத் மாசிகை


சமாதானம், ஒத்துழைப்பின் நியதி

மனிதகுல வரலாற்றில் புதிய
யுகம்

நியூட்ரன் குண்டு—சமாதானத்திற்குச் சவால்

வளர்முக நாடுகளில் பொதுத்துறை



SITHY VINAYAGAR
KARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY



இல. 1 JA 1978

மார்க்ஸியம் சர்வ வல்லமை படைத்தது, ஏனெனில் அது உண்மையானது.

வி. ஐ. லெனின்

# சோவியத் நாடு
## சோஷலிஸம்
## தத்துவமும் நடைமுறையும்

சோவியத் மாசிகை

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY
KA/2

நோவஸ்தி
செய்தி
ஸ்தாபனத்தின்
தயாரிப்பு

இல. 1 1978

## உள்ளடக்கம்

பக்கம்

மகத்தான பாரம்பர்யம்

**வி. ஐ. லெனின்**
கல்வி பற்றிய முதலாவது அனைத்து ரஷ்ய காங்கிரஸில் நிகழ்த்திய உரை 4

மார்க்ஸிய-லெனினியமும் இன்றைய உலகும்

**ஷ. ஸனகொயேவ் டி. எஸ்ஸி (வரலாறு)**
சமாதான ஒத்துழைப்பு நியதி 8

சோ. சோ. கு. ஒ. வளர்ச்சியுற்ற சோஷலிஸ சமுதாயம்

**டி. குணயேவ்**
மனிதகுல வரலாற்றிலோர் புதிய யுகம் 15

சோவியத் சமுதாயம் வாழ்வும் பிரச்னைகளும்

**எஸ். ரஷிதோவ்**
வலிமையினதும் சக்தியினதும் ஊற்றுக்கண் 26

உலக சோஷலிஸ சமாஜம்

**ஓ. பொ. கொ. மொலொவ்**
பரஸ்பரம் நலன் மிக்க ஒத்துழைப்புகள் 36

சமாதானத்திற்கும் இணக்க அமைதிக்குமான போராட்டம்

**வி. ஸ்ரயேல்யன்**
ஆயுதப் பரிகரணத்திற்கான இயக்கத்தின் முன்னணியில் 42

**எவ்ஜெனி பயதொரோவ்**
நியூட்ரன் குண்டு—சமாதானத்திற்குச் சவால் 47

சோ.சோ. கு. ஒன்றியமும் வளர்முக நாடுகளும்
சமூக—பொருளாதார முன்னேற்றத்திற்காக 51

வளரும் நாடுகளின் இன்றைய பிரச்னைகள்

**வி கொலேசோவ்**
வளர்முக நாடுகளில் பொதுத்துறை 59

# மகத்தான பாரம்பர்யம்

● கல்வி பற்றிய முதலாவது அனைத்து-ரஷ்ய காங்கிரஸில் லெனின் நிகழ்த்திய உரை

# கல்வி பற்றிய முதலாவது அனைத்து-ரஷ்ய காங்கிரஸில் நிகழ்த்திய உரை

கல்வி, நாம் இப்பொழுது நடத்திக் கொண்டிருக்கும் போராட்டத்தின் ஆக்கக் கூறான பகுதிகளுள் ஒன்றாகும். ஆஷாடபூதித்தனத்தையும் பொய்களையும் பூரணமான, நேர்மையான உண்மைகளைக் கொண்டு நாம் எதிர்த்து நிற்கின்றோம். பூர்ஷ்வாக்களால் ஒரு மூடு திரையாகப் பயன்படுத்தப்படும் ‘பெரும்பான்மையோரின் விருப்பம்’’ என்ற பதத்தின் அர்த்தம் என்ன என்பதை யுத்தம் மிக மிகத் தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டது. விரல்விட்டு எண்ணக் கூடிய பணமூட்டைகள் முழுத் தேசங்களையும் தமது சொந்த நலன்களுக்காக பலிபீடத்திற்கு இட்டுச் செல்கின்றார்கள் என்பதை அது எடுத்துக் காட்டியுள்ளது. பூர்ஷ்வா ஜனநாயகம் பெரும்பான்மை மக்களின் நலன்களுக்குச் சேவை செய்கிறது என்ற நம்பிக்கை இப்போது முற்றாகவே சிறுமைப்பட்டுவிட்டது. ஐரோப்பாவுக்கு புதியதான, ஆனால் 1905ம் வருட புரட்சியின் அனுபவத்திலிருந்தே எமக்குப் பரிச்சயமான எமது அரசியல் யாப்பும், எமது சோவியத்துக்களும் மகத்தான கிளர்ச்சியூட்டுகிற, பிரச்சார சாதனங்களாகத் திகழ்வதுடன்; பூர்ஷ்வா ஜனநாயகத்தின் பொய்மையையும் ஆஷாடபூதித்தனத்தையும் முழுமையாகவே அம்பலப்படுத்துகின்றன. நாங்கள் உழைப்பவர்களின்—சுரண்டப்படும் மக்களின் ஆட்சியை பகிரங்கமாகவே பிரகடனப் படுத்தியுள்ளோம்- இதில் தான் நமது பலத்தின், வெல்லற்கரியதன்மையின் ஊற்று வாய் உள்ளது.



இது கல்விக்கும் பொருந்தும்: பாடசாலைகளால் அரசியலுக்கு மேலாக இருக்கவும், சமுதாயம் முழுமைக்கும் சேவை செய்யவும் முடியும் என்று பிரகடனப்படுத்தும் பூர்ஷ்வா ராஜ்யம் கூடுதல் பண்பாடுள்ளதாக இருக்கும்போது அது மேலும் கூடுதல் நயவஞ்சகத்தனமாகப் பொய் கூறுகிறது.

உண்மையில் பாடசாலைகள் பூர்ஷ்வாக்களினது வர்க்க ஆட்சியின் கருவிகளாகவே மாற்றப்பட்டன. இவை பூர்ஷ்வா சாதி உணர்வில் முற்றாகவே ஊறிப்போனவையாகும். முதலாளிகளுக்குக் கீழ்ப்படிவுள்ள பாதந்தாங்கிகளையும், திறமையுள்ள ஊழியர்களையும் உருவாக்கியளிப்பதே இவற்றின் நோக்கமாகும். நவீன தொழில் நுட்பவியலின் உன்னத சாதனைகள் லட்சோப லட்சக் கணக்கான தொழிலாளர்களைக் கொன்று குவிப்பதற்கும், யுத்தத்தின் மூலம் பெரும் அதிர்ஷ்டத்தை அடையும் முதலாளிகள் பிரமாண்டமான லாபத்தை ஈட்டுக் கொள்வதற்குமான கருவியாகவே பயன்படுத்தப்படுகின்றன என்பதை யுத்தம் எடுத்துக் காட்டுகிறது. யுத்தம் உள்ளூரவே சிதைக்கப் பட்டுவிட்டது. ஏனெனில் உண்மையைக் கொண்டு பொருதி நாம் அவர்களின் பொய்மையை அம்பலப் படுத்திவிட்டோம். கல்வித் துறையில் எமது பணி பூர்ஷ்வாக்களைத் தூக்கியெறியும் எமது போராட்டத்தின் ஒரு பகுதியே என்று நாம் கூறுகிறோம். வாழ்விலிருந்தும் அரசியலிலிருந்தும் துண்டறுத்துக் கொண்ட கல்வி பொய்யும் அஷாடபூதித்தனமுமானதாகும் என்று நாம் பகிரங்கமாகவே கூறுகிறோம். பழைய பூர்ஷ்வா கலாசாரத்தின் மிகச் சிறந்த பிரதிநிதிகள் மேற்கொண்ட சீர்குலைவின் அர்த்தம் என்ன? இந்தச் சீர்குலைவு நடவடிக்கைகள் இந்த நபர்கள் கல்வி கற்றலை தமது ஏகபோகமாகவே கருதுகிறார்கள் என்பதையும் சாதாரண மக்கள் எனப்படுவோர் மீது தமது ஆட்சியதிகாரத்தைச் செலுத்துவதற்கான ஒரு கருவியாகவே இதை இவர்கள் கருதுகிறார்கள் என்பதையும் எந்த ஒரு கிளர்வூட்டும் பேச்சாளனிலும் பார்க்க, எமது உரைகள் எல்லாவற்றிலும் பார்க்க, பல்லாயிரக் கணக்கான துண்டுப் பிரசுரங்களிலும் பார்க்க மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டியது. சோஷலிஸ நிர்மாணப் பணியை சீரழிக்கவே இவர்கள் தமது கல்வியைப் பயன் படுத்தினார்கள், தொழிலாளி வர்க்கத்திற்கு எதிராகப் பகிரங்கமாகவே முன் வந்தார்கள்.

ரஷ்ய தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் புரட்சிகரப் போராட்டமே இறுதிப் பாடசாலையாகும். எமது அமைப்பு ஒன்றே அவர்களின் உண்மையான ஆட்சியை உத்தரவாதப்படுத்துகிறது என்பதை அவர்கள் கண்டுகொண்டனர், குலாக்ருகளினதும் உடைமையாளர்களினதும் முதலாளிகளினதும் எதிர்ப்பை பூரணமாக நிர்

மூலமாக்க அது தொழிலாளர்களுக்கு முடிந்த உதவிகள் அனைத்தையும் அளிக்கிறது என்பதை அவர்கள் உணர்கிறார்கள்.

உழைக்கும் மக்கள் அறிவுத் தாகம் கொண்டுள்ளனர். ஏனெனில் வெற்றியீட்ட இது அவசியமானதாகும். விமோசனத்திற்கான போராட்டத்தில் அறிவு ஒரு வலுவான ஆயுதம் என்பதையும், கல்வியின்மையே தமது தோல்விகளுக்கெல்லாம் காரணமாக இருந்துள்ளது என்பதையும், அனைவருக்கும் கல்விக்கான பாதையைத் திறந்து வைப்பது இப்போது தம்மையே பொறுத்துள்ளது என பதையும் ஒவ்வொரு பத்துத் தொழிலாளர்களிலும் ஒன்பது தொழிலாளர்கள் உணர்கிறார்கள். மக்கள் புதிய சோஷலிஸ ரஷ்யாவை நிர்மாணிக்க ஆரம்பித்துள்ளதால் எமது இலட்சியம் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் தமது சொந்த அனுபவங்களிலுமிருந்தும், தமது தோல்விகளிலும் தவறுகளிலுமிருந்தும் கற்றுக்கொள்கிறார்கள், தமது போராட்டம் வெற்றிகரமாக நிறைவெய்துவதற்கு கல்வி தவிர்க்கமுடியாத ஒன்று என்பதை அவர்கள் காண்கிறார்கள். பல நிலையங்கள் வீழ்ச்சியுற்ற போதிலும், சீர்குலைவு வேலைகளை செய்யும் அறிவாளிகள் பூரிப்பில் குதித்த போதிலும். தமது தலைவிதியைத் தமது சொந்தக் கரங்களில் எடுத்துக்கொள்ள, போராட்டத்தில் கிடைத்துள்ள அனுபவம் மக்களுக்குக் கற்றுக்கொடுத்துள்ளது என்பதை நாம் காண்கிறோம். மக்கள் பால் உண்மையிலேயே அனுதாப முள்ளவர்கள் அனைவரும், எல்லா நல்ல ஆசிரியர்களும் எமது உதவிக்கு வருவார்கள். இதுவே சோஷலிஸ இலட்சியம் வெற்றியீட்டும் என்பதற்கான உண்மையான உத்தரவாதமாகும்.

# மார்க்ஸிய-லெனினியமும் இன்றைய உலகும்

★ சமாதானத்தின்
ஒத்துழைப்பின் நியதி

ஷ. ஸனகோயேவ் டி. எஸ்ஸி (வரலாறு)

# சமாதானத்தின், ஒத்துழைப்பின் நியதி

20ம் நூற்றுண்டானது மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் சகாப்தமாக வரலாற்றிலிடம் பெறும். புதிய சோஷலிஸ ஒழுங்கை ஸ்தாபித்த இப்புரட்சி, புரட்சிக்கு முந்திய காலகட்டத்தின் கொள்கையிலிருந்து அடிப்படையில் வேறுபட்ட புதிய உள்நாட்டு. வெளிநாட்டுக் கொள்கையின் ஆரம்பத்திற்கு வழிகோலியது. சுரண்டும் வர்க்கத்தின் கொள்கைக்கு நேரெதிரான இப்புதிய கொள்கை மனிதநேயம், மெய்யான ஜனநாயகம், பரந்துபட்ட மக்களது நலன்களுக்குச் சேவை செய்வது ஆகியவற்றில் ஊறித்திளைத்ததாகும்.

## சுபீட்சத்திற்கு சமாதானம் அவசியம்

சமாதானத்தைப் பாதுகாப்பதற்கும் சர்வதேச ஒத்துழைப்பை அபிவிருத்தி செய்வதற்குமான இடைவிடாப் போராட்டம், 1917 அக்டோபர் புரட்சி வெற்றியடைந்த பின்னர், லெனினது வரலாற்றுப் பிரசித்தி பெற்ற சமாதான ஆணை பிரகடனப்படுத்தப்பட்ட தினத்தில் தோற்றம் பெற்ற சோவியத் வெளிநாட்டுக் கொள்கையிலிருந்து பிரிக்க முடியாத ஒரு பாதையாகும். இக் கொள்கை, சோ. க. க. வின் 24வது காங்கிரசின் சமாதான வேலைத்திட்டத்திலும், 1976ல் நடைபெற்ற 25வது காங்கிரஸ் வகுத்தளித்த சமாதானம், சர்வதேச ஒத்துழைப்புக்கும் மக்களது விடுதலைக்கும் சுதந்திரத்திற்குமான போராட்டத்தைத் தொடரும் வேலைத்திட்டத்திலும் மேலும் விருத்தி செய்யப்பட்டுள்ளது.



சோவியத் யூனியனின் புதிய அரசியல் யாப்பிலும் சோவியத் சமாதானக் கொள்கை இடம்பெற்றுள்ளது; முதன் முறையாக சோவியத் வெளிநாட்டுக் கொள்கை பற்றிய ஓர் அத்தியாயம் யாப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

சோவியத் நாடு லெனினிய சமாதானக் கொள்கையை உறுதியாகப் பின்பற்றுவதுடன், நாடுகளது பந்தோபஸ்தையும் பரந்த சர்வதேச ஒத்துழைப்பையும் வலுப்படுத்துவதிலும் உறுதியுடன் நிற்கிறது என்று அரசியல் யாப்பு வலியுறுத்துகிறது. சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் சிறப்பியல்பை, வர்க்க உள்ளுறையை, பிரதான மார்க்கங்களை வரையறை செய்யும் முக்கிய கோட்பாடுகளுக்கு அரசியல் யாப்பு சட்டவடிவம் கொடுக்கிறது: ''சோ. சோ. கு. ஒன்றியத்தில் கம்யூனிஸத்தை நிர்மாணிப்பதற்குச் சாதகமான சர்வதேச நிலைமைகளை உத்தரவாதப் படுத்துவதும், சோவியத் யூனியனின் ராஜ்ய நலன்களைப் பாதுகாப்பதையும் உலக சோஷலிஸத்தின் நிலைபாடுகளை ஸ்திரப்படுத்துவதையும் தேசிய விமோசனத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்குமான மக்களின் போராட்டத்திற்கு ஆதரவளிப்பதையும் ஆக்கிரமிப்பு யுத்தங்களைத் தவிர்ப்பதையும் உலக வியாபிதமான பூரண ஆயுத பரிகரணத்தை ஈட்டுவதையும் மாறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுக்கிடையில் சமாதான சகஜீவனக் கோட்பாட்டை நிலைநிறுத்தியதுடன் செயல்படுத்துவதையும் சோ. சோ. கு. ஒன்றியத்தின் அயல்நாட்டுக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.''

சோவியத் நாடு தனது ஆரம்பகாலம் தொட்டு இக் கோட்பாடுகளைப் பின்பற்றிவருகிறது. சோஷலிஸ, கம்யூனிஸ நிர்மாணத்தின் காலகட்டம் முழுவதற்குமான சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் போருபாயப் பாதையை இக்கோட்பாடுகள் வரையறை செய்வதுடன், அதன் ஸ்திரத் தன்மைக்கும், சமாதானத்தை பேணிப் பாதுகாக்கும் போராட்டத்தின் தொடர்ச்சிக்கும் சிறப்பளிக்கின்றன.

சோவியத் தேசத்தின் உயர் இலக்குகளை—வர்க்க பேதங்களற்ற கம்யூனிஸ சமுதாயத்தை நிர்மாணிப்பது, உழைக்கும் மக்களது பொருளாயுத, கலாசார தரங்களை உயர்த்துவது, நாட்டின் பந்தோபஸ்தினை உறுதிப்படுத்துவது, சமாதானத்தையும் சர்வதேச ஒத்துழைப்பின் அபிவிருத்தியையும் வலுப்படுத்துவது—ஆகிய இலக்குகளை அடைவதையே சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் நோக்கம் என்று அரசியல் யாப்புத் தெளிவாகக் கூறுகிறது.

## அனைத்து புரட்சிகர சக்திகளின் ஐக்கியத்திற்காக

உலகப் புரட்சிகர சக்திகளின் வல்லமை மிக்க, வெல்லற்கரிய அரணாக விளங்குவதும், மனித குலத்தின் சிறப்பான எதிர்காலத்திற்காகவும் உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்கும் யுத்தத்தைத் தடுப்பதற்குமாகப் போராடும் சகல போராளிகளின் முன்னணிப்படையாக விளங்குவதுமான மாபெரும் வரலாற்றுப் பணியானது உலகின் முதலாவது சோஷலிஸ நாட்டின் மீது பெருமளவில் தங்கியுள்ளது. இப்பணியை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசும் எப்பொழுதுமே மதிப்புடன் நிறைவேற்றிவருகின்றன. அவை, உலகப் புரட்சிகர சக்திகள் அனைத்தினதும் ஐக்கியத்திற்காகவும், குறிப்பாக உலக சோஷலிஸ அமைப்பின் நிலைபாட்டை வலுப்படுத்தவும், ஒருமைப்பாட்டை உயர்த்தவும் அயராது போராடி வருகின்றன.

சோஷலிஸ நாடுகளுக்கிடையிலான உறவுகள் பால், அரசியல் யாப்பு, குறிப்பான கவனம் செலுத்துகிறது. அதன் 30வது விதி கூறுவதாவது, ''உலக சோஷலிஸ அமைப்பினதும், சோஷலிஸ சமாஜத்தினதும் ஒரு பகுதி என்ற வகையில் சோ. சோ. கு. ஒன்றியம் சோஷலிஸ சர்வதேசியக் கோட்பாட்டின் அடிப்படையில் ஏனைய சோஷலிஸ நாடுகளுடன் நட்புறவையும் ஒத்துழைப்பையும் தோழமை பூர்வமான பரஸ்பர உதவியையும் வளர்த்து வலுப்படுத்துவதுடன் சோஷலிஸ பொருளாதார ஒருங்கிணைப்பிலும் சோஷலிஸ சர்வதேச உழைப்புப் பிரிவினையிலும் முனைப்பாகப் பங்கெடுக்கிறது.''

உலக கம்யூனிஸ, தொழிலாள வர்க்க இயக்கங்களிலும் கம்யூனிஸ, தொழிலாளர் கட்சிகளின் ஒருமைப்பாட்டை உயர்த்துவதிலும் மார்க்ஸிஸ—லெனினிஸ சித்தாந்தத்தின் மெய்மையைப் பாதுகாப்பதிலும்' பூர்ஷ்வா சித்தாந்தத்துக்கும் (இடதுசாரி), வலதுசாரித் திரிபுவாதத்துக்குமெதிரான போராட்டத்திலும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மகத்தான பாத்திரத்தை வகிக்கிறது. தொழிலாள வர்க்க சர்வதேசியக் கோட்பாடுகளின் மீது, உலக கம்யூனிஸ இயக்கத்தின் இதர பிரிவுகளுடன் தனது உறவுகளைக் கட்டியுள்ள சோ. க. க. தேசியரீதியாகவும் சர்வதேசிய ரீதியாகவும் தமது நிலைபாட்டை வலுப்படுத்துவதற்காக, சுரண்டும் வர்க்கத்திற்கு எதிராக அவை நாளாந்தம் தொடுத்துவரும் போராட்டத்தில் உண்மையான நேச அணியாகவும் செயல்பட்டுவருகிறது.



காலனி நாடுகளிலும் சார்பு நாடுகளிலும் உள்ள தேசிய விமோசன இயக்கங்களைப் பொறுத்தமட்டில், சோவியத் யூனியன், காலனியாதிக்க நவகாலனியாதிக்கத்தின் அனைத்து வடிவங்களுக்கும் எதிராகத் தமது தேசிய சமுதாய எழுச்சிக்காகப் போராடும் மக்களுடனான சகோதரத்துவ ஒருமைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட நிலையையே எப்போதும் எடுத்துவருகிறது.

பிடெல் காஸ்ட்ரோ சோ: க. க. வின் 25வது காங்கிரஸில் பின்வருமாறு கூறினார்: ''இன்றோ உலக சோஷலிஸ சமுதாயம் என ஒன்றுள்ளது. இன்று, அக்டோபர் புரட்சியால் உலகத்திற்குக் கொண்டுவரப்பட்ட மாற்றங்களினாலும் பாஸிஸத்தின் முறியடிப்பினாலும் எல்லாக் கண்டங்களிலுமுள்ள நூற்றுக்கு மேற்பட்ட காலனி, அரைக் காலனி நாடுகள் தாம் காலனியாதிக்க மற்றும் ஏகாதிபத்திய சக்திகளுக் கெதிராக நடாத்திவந்த உறுதியான போராட்டங்களில் சுதந்திரத்தை வென்றெடுக்க முடிந்தது.''

தேசிய விமோசன இயக்கத்தின் இன்றைய கட்டத்தில் சோவியத் யூனியனும் இதர சோஷலிஸ நாடுகளும், வளர்முக நாடுகளும் தமது அரசியல் சுதந்திரத்தை உறுதிப்படுத்தவும் பொருளாதார சுதந்திரத்தை அடையவும் தமது சர்வதேசிய நிலைபாட்டை மேலும் வலுப்படுத்தவும் உதவியளித்து வருகின்றன.

## சமாதான சகஜீவனக் கொள்கை

புதிய சோவியத் அரசியல் யாப்பில் வரையறை செய்யப்பட்டது போல, சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் பிரதான மார்க்கங்களிலொன்று, ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கெதிரான போராட்டமும், முதலாளித்துவ நாடுகளுடனான தனது உறவுகளில் சமாதான சகஜீவனக் கோட்பாட்டை இடையறாது பின்பற்றுவதாகும்.

முதலாளித்துவ நாடுகளுடனான தனது உறவுகளை சோவியத் அரசாங்கம் கட்டியெழுப்புகையில் இக்கோட்பாடுதான் எப்போதுமே அதற்கு வழிகாட்டியாக விருந்தது. சோவியத் யூனியனின் சமாதானப் போராட்டமானது வேறுபட்ட சமுதாய அமைப்பைக் கொண்ட நாடுகளுக்கிடையில் சமாதான சகஜீவனக் கோட்பாட்டை உறுதிப்படுத்தும் போராட்டத்துடன் மிக நெருக்கமாகப் பிணைந்துள்ளது.

மேற்குலகின் ஆளும் வட்டாரங்கள் நீண்டகாலமாக சோவியத் யூனியனுடனான தமது உறவுகளில் சமாதான

சகஜீவனக் கோட்பாட்டை மூர்த்தண்யத்துடன் நிராகரித்து வந்தன. அத்தோடு, உலக அரங்கில், ஏகாதிபத்தியத்தின் பழைய பிரித்தாளும் கொள்கையை மீண்டும் நிலைநிறுத்தும் முயற்சியில் சகல சூழ்ச்சிகளையும் மேற்கொண்டு வந்தன. ஆனால், உலக வர்க்க, அரசியல் சக்திகளிடையே ஏற்பட்ட புதிய சமநிலை, முதலாளித்துவ நாடுகளின் தலைவர்களை, சமாதான சகவாழ்வுக் கொள்கையை அங்கீகரிக்க வைத்தது.

இதன் மூலம், ஏகாதிபத்திய பிற்போக்குச் சக்திகள் சோவியத் யூனியன், இதர சோஷலிஸ நாடுகள் பால் கொண்டுள்ள மனோபாவத்தை மாற்றிவிட்டன என்றோ, அல்லது சோஷலிஸத்துக்கு எதிரான சித்தாந்த அரசியல் குழிபறிப்புப் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளதன் மூலமும், இராணுவ வெறித்தனத்தை அதிகரித்து ஆயுதப் போட்டியை உக்கிரப்படுத்தியதன்மூலமும் முதலாளித்துவத்தின் படுமோசமான நெருக்கடிகளைத் தாண்டிவரும் முயற்சிகளைக் கைதுறந்து விட்டன என்றோ கருதலாகாது.

மேற்குலக நாடுகளின் அரசியல் மார்க்கம் நிர்ணயமற்றதாகவுள்ளது என்பது வெளிப்படை. இருந்தும் அவை புதிய நிலைபாடுகளில் பழைய கொள்கைகளைப் பயன்படுத்தவும் ஆக்கிரமிப்பு இராணுவக் கூட்டணிகளை உக்கிரப்படுத்துவதன் மூலம் உலக ஏகாதிபத்தியத்தின் நிலையை ஸ்திரப்படுத்தவும் முயலுகின்றன.

நேட்டோவைப் பலப்படுத்த அமெரிக்காவும் அதன் மேற்கு ஐரோப்பிய கூட்டாளிகளும் எடுக்கும் பெருமுயற்சிகளும் இந்த ஆக்கிரமிப்புக் கூட்டணியின் உள்ளும் புறமும் அவை மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கைகளும் அவற்றின் அரசியல் போக்கைப் பிரத்தியட்சமாகக் காட்டுகின்றன.

நவீன நிலைபாடுகளில் சோவியத் கொள்கையானது தெட்டத் தெளிவானதாக உள்ளது; ஏகாதிபத்திய சூழ்ச்சிகளுக்கு உறுதியான பதிலடி கொடுப்பதும் வேறுபட்ட சமுதாய அமைப்புகளைக் கொண்ட நாடுகளிடையே சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டை நிலைபெறச் செய்வதுமே அக் கொள்கையாகும். அதன் கோட்பாடுகளை மேலும் தெளிவுபடுத்துவதினதும் பல்வேறு அம்சங்களை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசாங்கமும் ஆக்கபூர்வமாக வகுத்துள்ளன. ஐ. நா. சாசனம் போன்ற தஸ்தாவேஜுக்கள், ஐ. நா.வின் பல முக்கிய தீர்மானங்கள், வேறுபட்ட சமூக அமைப்பைக் கொண்ட நாடுகளுக்கிடையிலான இருபக்க உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் பலவும், பந்தோபஸ்து ஒத்துழைப்புக் குறித்து ஐரோப்பிய மகாநாட்டின் இறுதி அறிக்கையும் சமாதான சகவாழ்வுக்



கொள்கை, காலத்தின் சோதனையை வென்று நிற்பதைக் காட்டுகின்றன. உலக சமாதானத்தை வலுப்படுத்துவதிலும், சோஷலிஸ, முதலாளித்துவ நாடுகளுக்கிடையில் ஒத்துழைப்புக்களை வளர்ப்பதிலும் தனது ஸ்திரத்தன்மையை இக் கொள்கை நிரூபித்துள்ளது. இன்று பல்வேறு நாடுகளின் அதிகப்படியான மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளது.

சோவியத் யூனியனுக்கும் இதர நாடுகளுக்குமிடையிலான உறவுகளுக்கு அடிப்படையாகவுள்ள கோட்பாடுகள், லெனினிய சமாதான சகவாழ்வு, சர்வதேச ஒத்துழைப்புக் கொள்கையின் சர்வதேசியத் தன்மையிலிருந்து முளையிட்டுள்ளன என்பதை புதிய அரசியல் யாப்பு பிரகடனப்படுத்துகிறது. இனவாதம், வன்முறை பயன்படுத்துவதையும், வன்முறை அச்சுறுத்தலையும் பரஸ்பரம்கைதுறத்தல், தன்னுதிக்கசயத்துவம், எல்லைகளின் மீறவொண்ணுத் தன்மை, நாடுகளின் பிரதேச ஒருமைப்பாடு, தகராறுகளுக்கு சமாதானபூர்வமான தீர்வு, உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமை, மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரத்தையும் கௌரவித்தல், மக்களுக்கு சம உரிமையையும் தமது சொந்தத் தலைவிதியைத் தாமே தீர்மானிப்பதற்கு அவர்களுக்குள்ள உரிமையையும், நாடுகளுக்கு மத்தியில் ஒத்துழைப்பு, பொறுப்புக்களை நல்ல விஸ்வாசத்துடன் செய்து முடித்தல். இவைதாம் சர்வதேச சட்டத்தின் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடுகளும் விதிகளுமாகும். இவைதாம் சோவியத் யூனியன் கைச்சாத்திட்ட சர்வதேச உடன்படிக்கைகளின் அடித்தளங்கள்.

★

சகல நாடுகளுமே இந்த அடிப்படைக் கோட்பாடுகளை உறுதியாகப் பின்பற்றினால் சர்வதேச நெருக்கடி உக்கிரமடைவதும் ஆயுதப் போட்டியும் தடுக்கப்பட்டு, யுத்தமானது மனித குலத்தின் வர்ழ்வினின்றும் என்றென்றைக்குமாக விலக்கப்பட்டுவிடும் என சோவியத் யூனியன் எதிர்பார்ப்பது மிகப் பொருத்தமே.

# சோ. சோ. கு. ஒ. வளர்ச்சியுற்ற சோஷலிஸ சமுதாயம்

❁ மனிதகுல வரலாற்றிலோர் புதிய யுகம்

**டி. குணயேவ்**

சோ.க.க. மத்தியக் கமிட்டியினது அரசியல் குழு உறுப்பினர் கஸாக்ஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சி, மத்தியக் கமிட்டியின் முதலாவது செயலாளர்.

# மனிதகுல வரலாற்றிலோர் புதிய யுகம்

உலகின் முதலாவது தொழிலாளர், விவசாயிகளது அரசின் முதல் சட்டம், லெனினது புகழ்பெற்ற சமாதான ஆணையாகும். இது புதிய யுகத்தின் மகோன்னத சட்டத்தை சோஷலிஸமும் சமாதானமும் பிரிக்கவொண்ணாதவை என்ற சட்டத்தைப் பிரகடனஞ் செய்தது. இந்த ஆணையானது வேறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளின் சமாதான சகவாழ்வுக் கருத்தினை சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாக முன்வைத்தது.

மற்றொரு தஸ்தாவேஜுவான ருஷ்ய மக்களின் உரிமைகள் பிரகடனம், எல்லாக் காலங்களுக்குமாக, அனைத்து தேசங்களுக்கும் தேசிய இனங்களுக்குா விடுதலையை வழங்கிற்று. அது, சுதந்திரம், சமத்துவம், சகோரதத்துவம் ஆகியனவற்றின் அடிப்படையில் அவை புதிய வாழ்வைத் தொடங்குவதைக் குறித்தது.

இவ்வாறு சோவியத் நாட்டின் ஆரம்ப நாட்களின் போதே, கம்யூனிஸ்ட் கட்சியின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளுக்கிடையே ஆழ வேரூன்றியுள்ள பிணைப்பு வெளிப்பட்டது. உலகின் துரிதமான முன்னேற்றத்துடன், புதிய சமூக அமைப்பை பலப்படுத்துவதுடனும் சோவியத் நாட்டின் வல்லமையையும் அரசியல்ரீதியான கௌரவத்தையும் வலுப்படுத்துவதுடனும் இந்தப் பிணைப்பு மேலும் செய

லுறுதி மிக்கதாயும் பன்முகப்பட்டதாயும் வளர்ந்து, சோஷலிஸ அமைப்பினதும் அதனது உயர்ந்த இலட்சியங்களினதும் சாராம்சத்திலிருந்து முகிழும் வர்க்கத் திசையமைவையும், மெய்யான சோஷலிஸத்தினது வெளிநாட்டுக் கொள்கையின் உறுப்பமைவான சமாதான இயல்பையும் நிர்ணயித்தது. இந்தப் பிணைப்பு இன்று முன்னெப்போதையும் விட தெளிவாக உள்ளது.

## சமத்துவம் நிறைந்த குடும்பத்தில்

சோஷலிஸமும் சமாதானமும் பிரிக்க வொண்ணாதவை. சோஷலிஸத்தின் சமாதானத்தை உறுதி செய்யும் பயணத்தை இந்த அடியாதாரமான லெனினிய ஆய்வுரை பிரதிபலிக்கிறது. இது நாடுகள் மத்தியில் சமாதானத்தை வலுப்படுத்துவதில் அக்கறை கொள்ளாமலும் பாடுபடாமலும் இருந்தால், ஒரு சமுதாயத்தின் பூரணமான சமூக சமத்துவமும் தனிநபர் முன்னேற்றமும் சாத்தியமற்றதாகிவிடும்.

மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியானது, முதலாவது உலகப் போரின் கடுஞ் சுழற்சியிலிருந்து நாட்டை விடுவித்ததோடு, அதன் சுதந்திரமான வளர்ச்சியையும், துரிதமான முன்னேற்றத்தையும் உறுதி செய்தது.

புரட்சியின் போதும் உள்நாட்டுச் சண்டையின் போதும் வெளிநாட்டுத் தலையீட்டின் போதும் எண்ணற்ற இடர்களையும் எதிரிகளின் சதித்திட்டங்களையும் கடந்ததைப் போலவே ருஷ்யத் தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையிலான சோவியத் நாட்டு மக்களின் நெருங்கிய ஒருமைப்பாடும் ஐக்கியமும் நல்லுறவும் முன்னேறி மேலும் பலம்பொருந்தியதாகியது.

ருஷ்ய மக்களின் சமத்துவத்தையும், சுயாதிபத்தியத்தையும், பிரிந்து செல்லக் கூடிய அளவுக்கு அவர்களின் சுயநிர்ணய உரிமையையும், எல்லா சிறுசிறு தேசியக் கட்டுப்பாடுகளை ஒழிப்பதையும், தேசிய சிறுபான்மையினரதும், இனக் குழுக்களினதும் சுதந்திரமான வளர்ச்சியையும் கட்சி பிரகடனஞ் செய்தது. சமூக மற்றும் மதக் கட்டுப்பாடுகள் அனைத்தும் ஒழிக்கப்பட்டன, பெண்கள் ஆண்களுக்கு சமமானவர்களாக்கப்பட்டனர். தமது தாய்மொழியிலேயே கல்விப் போதனை பெறும் உரிமை வழங்கப்பட்டது. தேவாலயத்திலிருந்து பாடசாலையும், அரசிலிருந்து தேவாலயமும் பிரிக்கப்பட்டன. தேசிய கலாசார சின்னங்களைப் பேணிக்காக்கும் நடவடிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டன.



இந்த அளவற்ற வளர்ச்சிகள் ருஷ்ய மக்களால் நன்றியுடனும், மகிழ்வுடனும் பாராட்டப்பட்டன. தேசிய அவநம்பிக்கையையும் குரோதத்தையும் பூரணமாகக் கடப்பதற்கான சூழ்நிலைகளைக் கட்சி உருவாக்கியது.

1922ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சுதந்திரமிக்க மக்களின் தோழமைச் சமாஜமான சோவியத் சோஷலிஸக் குடியரசுகள் ஒன்றியம் உருவாக்கப்பட்டமை, சர்வதேசியக் கருத்துக்களுக்கான மெய்யான வெற்றியாகும்.

உழைக்கும் மக்களை சர்வதேசியவாதிகளாக ஒருங்கிணைப்பதிலான எமது அனுபவம் விலைமதிக்க முடியாத சொத்தாகும். இதை நாம் யாரிடமும் மறைக்கவோ அல்லது எம்மைச் சிறுமைப்படுத்துவோர் கோருவதைப்போல் இதை சரியானதோர் ''மாதிரி''யாக சர்வதேசியமாக்கவோ இல்லை. எமது புரட்சியின் வெற்றியானது, உலகை சமூகரீதியாகப் புனருத்தாரணம் செய்வதற்கான போராட்டத்தில் எல்லா நாடுகளிலுமுள்ள முற்போக்குச் சக்திகளின் நல்லுறவுக்கு மேலாதிக்கமான முக்கியத்துவத்தைக் கொடுத்தது.

## லெனினது கருத்துக்கள் நனவாகின்றன

முன்னெப்போதும் கண்டறியாத அளவுக்கு சோஷலிஸம் உற்பத்திச் சக்திகளை கட்டவித்துவிட்டது, பிரிக்கவொண்ணாதவாறு கட்சியின் ஆளுமையால் ஐக்கியப்பட்டுள்ள மக்களின் மகோன்னதமான சகோதரத்துவத்தினது வியக்கத்தக்க வலிமையால் இந்தச் சக்திகள் முக்கியமான பணிக்கு ஈடுபடுத்தப்பட்டன.

கஸாக்ஸ்தானை எடுத்துக் கொள்ளுங்கள். ஸாரிஸம் கஸாக் மக்களையும் அவர்களின் நிலங்களையும், அவர்களின் பெயர்களையும் கூட திருடியது. வெளிநாட்டு சலுகை பெற்றவர்களால் இயற்கைச் செல்வங்கள் சூறையாடப்பட்டன. லட்சக்கணக்கான நாடோடி மக்கள் தமது கரங்களில் புத்தகத்தை ஏந்தியதில்லை. ஒரு கல்லூரியோ, பல்கலைக்கழகமோ, பேரவையோ, நாடக அரங்கோ அல்லது வாசகசாலையோ எப்படி இருக்கும் என்று அவர்களுக்குத் தெரியாது. புரட்சிக்கு முன்பு 22 கஸாக்கியர்களே உயர் கல்வி பெற்றிருந்தனர்.

அக்டோபர் புரட்சி மாத்திரம் நிகழாதிருந்திருந்தால் எமது நாட்டில் உள்ள எண்ணிறந்த மக்களுக்கு என்ன நடந்திருக்கும் என்பதைச் சொல்வது கடினமாகும். புரட்சியின் பின்னரான சில ஆண்டுகளுக்குள்ளேயே, பல நூற்றாண்டுகளுக்குச் சமமான பாதையை இவர்கள் கடந்தனர். எமது கட்சி லெனினியத் தேசிய இனக் கொள்கையைப் பின்பற்றியதாலேயே இது சாத்தியமாயிற்று.

அக்டோபர் புரட்சி நடைபெற்ற பின்னரான ஆண்டுகளில், அவர்கள், மர உழுசாலிலிருந்து சக்திமிக்க டிராக்டர்களுக்கும், நவநவீனமான இயந்திரங்களுக்கும், பய்கனூர் விண்வெளித் தளத்திற்கும், ஒதுக்குப்புறத்திலிந்து திறந்த பிரகாசமான சோஷலிஸ நகரங்களுக்கும், பூரணமான கல்வியறிவின்மையிலிருந்து தேசியப் பேரவைகளுக்கும், பல்வேறு விவான பிரச்னைகளைக் கையாளும் நூற்றுக்கணக்கான ஆராய்ச்சிக் கழகங்களுக்கும் ஏனைய ஸ்தாபனங்களுக்கும், அண்ட நுணுக்கப் பண்டத்திலிருந்து புறவெளிக்கும் தகுதி பெற்றுள்ளனர். எமது குடியரசுகள் ஒன்றுவது தாமாகவே இந்த நிலையை அடைய முடியுமா? உண்மையிலேயே இல்லை. மக்களின் மெய்யான முன்னேற்றமும், ஆன்மீக, மற்றும் சமூகப் புத்தெழுச்சியும் தேசிய ஒதுக்கம் தனிமைப்பாட்டுப் பாதையில் எய்தப்படவில்லை. ஆனால், உண்மையான படைப்புணர்வு, அளவில்லா இயக்க ஆற்றலுடன் உருவான ஒரு புதிய வாழ்வை, மகிழ்ச்சி மிக்க, சுதந்திரமான வாழ்வைக் கட்டி எழுப்புவதற்கான பொதுவான, கூட்டு முயற்சியின் பெறு பேறாலேயே எய்தப்பட்டன.

பின்வரும் புள்ளி விபரங்களிலிருந்து நிறைவேற்றப்பட்ட செயல் அளவைக் காணலாம்: 1977ம் ஆண்டில் கஸாக்ஸ்தானின் தொழில்துறை உற்பத்தி புரட்சிக்கு முன்னர் இருந்த மட்டத்தைவிட 220 தடவைகளாலும், 1940ம் ஆண்டின் யுத்த முற்கால மட்டத்தை விட ஏறத்தாழ 30 தடவைகளாலும் அதிகரித்துள்ளது. ஏனைய மத்திய ஆசியக் குடியரசுகளும் இதேபோன்ற முன்னேற்றத்தை எய்தியுள்ளன.

சோஷலிஸ அமைப்பினதும், உற்பத்திச் சக்திகளின் உயர் மட்டத்தினதும் அனுகூலங்கள் கணிசமான வாழ்க்கைத் தர உயர்ச்சிக்குப் பங்களித்துள்ளன: சோவியத்தின் ஆரம்ப ஆண்டுகளில் லெனின் முன்வைத்த கடமைகளை கஸாக்ஸ்தானும் ஏனைய தோழமைக் குடியரசுகளைப் போல

---

1. 2, 718, 000 சதுர மீட்டர் பிரதேசம், ஜனத்தொகை 14, 527, 900.



வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளன. இன்று, கஸாக்கியர்களில் இருவரில் ஒருவர் கல்வி கற்று வருகின்றார்.

மத்திய ஆசியாவிலும், கஸாக்ஸ்தானிலும் கலாசாரப் புரட்சியில் ஈட்டப்பட்ட வெற்றியும், அவற்றின் தேசியகலாசார முன்னேற்றமும். கட்சித தலைமையின் கீழும், மக்களின் சமத்துவம் மற்றும் நட்புறவு, அவர்களின் தகர்க்கவொண்ணாத சகோதரத்துவக் கொள்கையாலும் மேற்கொள்ளப்பட்ட சமூகப் பொருளாதார மாற்றங்களின் பெறுபேறாகும்.

சோஷலிஸத்தின் கீழ் மாத்திரமே, தேசியப் பொருளாதாரம், மற்றும் கலாசாரம் ஆகியவற்றின் மெய்யான முன்னேற்றத்தை மிகக் குறுகிய காலத்திற்குள் எய்த முடியுமென்பதை கஸாக்ஸ்தானினதும் ஏனைய மத்திய ஆசியக் குடியரசுகளினதும் அனுபவம் மீண்டும் மீண்டும் திட்டவட்டமாக நிரூபிக்கின்றது. உண்மையிலேயே எமது சாதனைகளைப் பற்றிப் பேசும்போது எமது மனங்களில் பூரண நிறைவை நாம் கொண்டிருக்கவில்லை எமக்கு இன்னும் இடர்களும் பிரச்னைகளும் உள்ளன. ஆனால் அவற்றில் பெரும்பாலானவை; வளர்ச்சி பற்றிய இடர்களும், பிரச்னைகளுமேயாகும். ஆனால் அவை இரண்டையுமே நிச்சயமாக நாம் தீர்ப்போம்.

எமது குடியரசுகள் தமது அனுபவங்களைத் தாராளமாகப் பகிர்ந்து கொள்கின்றன. வெளிநாடுகளுடனான சோவியத் யூனியனின் பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுட்ப, கலாசார பரிவர்த்தனையில் செயலூக்கமுடன் பங்கெடுக்கின்றன. இன்று கஸாக் குடியரசானது 80 நாடுகளுடன் பொருளாதாரத் தொடர்புகளையும், 96 நாடுகளுடன் கலாசாரத் தொடர்புகளையும் கொண்டிருக்கிறது என்ற இந்த உண்மையின் மூலம் இது மிகத் தெளிவாக நிரூபிக்கப்படுகின்றது. கடந்தகால நாடோடிகளின் குழந்தைகளும், பேரக் குழந்தைகளும், பல ஆசிய ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் மக்களுக்கு மிகவும் தகுதிவாய்ந்த விஞ்ஞான, தொழில்நுட்ப உதவிகளை வழங்குகின்றனர்.

## சர்வதேச உறவில் ஒரு திருப்பம்

மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியானது சர்வதேச உறவுகளது அமைப்பு முழுவதையுமே தீவிரமாக புனரமைப்புச் செய்யும் பணியைத் தொடக்கிவைத்தது. 1917ம் ஆண்டில், ஏகாதிபத்தியத்தின் பிரிக்கப்படாத ஆதிக்க யுகத்தை, சோஷலிஸத்திற்கும் முதலாளித்துவத்திற்கு மிடையிலான போட்டியும், போராட்டமும் மிக்க

யுகம் வெற்றி கொண்டது. உலகின் முதலாவது சோஷலிஸ அரசின் வெளிநாட்டுக் கொள்கையானது, சர்வதேசக் கொள்கைகளைப் புனரமைப்பு செய்வதில் தொடர்ந்தும் மகத்தான பங்குப்பணியை ஆற்றும். இக் கொள்கையானது, லெனினின் நாமத்துடனும், அவருடைய சகபாடிகள், மற்றும் அவரைப் பின்பற்றியவர்களது நாமங்களுடனும் நேரடியாக இரண்டறக் கலந்துள்ளது. அதனது அடிப்படைக் கோட்பாடுகளாக, பாட்டாளி வர்க்க சர்வதேசியமும், வேறுபட்ட சமூக அமைப்புகளுடனான சமாதான சகவாழ்வுமாகவே இருந்துள்ளன, இருந்துவருகின்றன.

இது, எமது சமாதான முயற்சிகள் அனைத்துமே வெற்றிடைந்துள்ளன என்று கூறுவதற்காக அல்ல, அப்படி இருக்கவும் முடியாது. இது இப்படித்தான் இருந்தது. ஏனெனில், முதலாவது தஸாப்தத்தின்போது, சோவியத் யூனியனும் அதனது தோழமை நாடான மங்கோலியாவும் மாத்திரமே ஏகாதிபத்தியத்தை எதிர்த்தன. இன்றைய சோஷலிஸ சமாஜம் அன்று இருக்கவில்லை. அன்று இரண்டாவது உலகப் பேரழிவைத் (1939—1945) தடுத்து நிறுத்தக்கூடியநிலையில் இவை இருக்கவில்லை.

பாஸிஸம் படுதோல்வியுற்றதில் யுத்தம் முடிவடைந்தது. இதற்கு சோவியத் யூனியன் நிர்ணயமாக பங்களிப்பைச் செய்தது. இந்த யுத்தத்தில் சோவியத் யூனியன் 2 கோடிப் பேரை இழந்தது சொல்லொணுத் துன்பத்தையும், அழிவையும் இப்போர் கொண்டுவந்தது. சோவியத் மக்களைப் போல துன்பத்தை அனுபவித்தவர்கள் வேறு எந்த நாட்டிலும் இல்லை. உண்மையான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய பண்புகளைப் பெற்றவர்களும், புதிய உலகின் வலிமையில் துணிவையும் நம்பிக்கையையும் பெற்றவர்களுமான மக்களை வென்று அடக்க முடியாது என்பதை உணரத் தவறிய எதிரிகள் தப்புக் கணக்குப் போட்டனர்.

மாபெரும் தேசபக்தப் போரின் பாடங்கள், சோவியத் நாட்டிற்கு எதிரான எந்த ஆக்கிரமிப்பும் நிச்சயம் தோல்வியடைந்தே தீரும் என்று, இராணுவ சூதாட்டங்களை மேற்கொள்ளும் அனைவரையும் எச்சரித்தது. ஏனெனில், சோஷலிஸ, ஜனநாயகச் சக்திகள் அழித்தொழிக்கப்பட முடியாதவையாகும்.

லெனினது ஆணைகளைப் பின்பற்றும் சோவியத் யூனியனனது, யுத்த பிற்கால ஆண்டுகளின்போது புதிய உலகப் போரைத் தடுப்பதற்கும், இணக்க அமைதிக்கும், பொதுவான பூரணமான ஆயுதப் பரிஹரணத்திற்குமான போராட்டத்தில், அளவிடமுடியாத பலம் கொண்ட சமாதானம்



மற்றும் முன்னேற்றச் சக்திகளுக்குத் தலைமை தாங்கியது. சோ. க. க.வின் 24வது காங்கிரஸில் முன்வைக்கப்பட்ட சமாதான வேலைத்திட்டமானது உலகில் பெருமளவில் பிரபல்யமாகிற்று. அது, 25வது காங்கிரஸால் முன்வைக்கப்பட்ட சமாதானம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கு மேலும் போராடுவதற்கான வேலைத்திட்டத்தில் அதனது உறுப்பபையான தொடர்ச்சியையும், வளர்ச்சியையும் கண்டது.

சமாதான வேலைத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக ஆற்றப்பட்டுள்ள எல்லாமே உண்மையிலேயே நிரந்தரமான வரலாற்றுச் சிறப்பைக் கொண்டவை என்று கூறினுல் அது மிகையல்ல. அதனது ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதானது, சர்வதேசச் சூழலை கணிசமாக அபிவிருத்தி செய்துள்ளதோடு, வேறுபட்ட அரசியல் அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடன், பொருளாதார, கலாசார, விஞ்ஞான, தொழில்நுட்ப ஒத்துழைப்பை உத்வேகப்படுத்திற்று. சோஷலிஸ நாடுகளின் நிலைகளும் பலமிக்கவையாக வளர்ந்துள்ளன. அதைப் போலவே அவற்றின் சர்வதேசக் கொள்கையின் பயன்தரும் தாக்கமும் வளர்ந்துள்ளன. இணக்க அமைதியானது முன்னணிப் போக்காக மாறியுள்ளது.

சோஷலிஸமானது, தனது லாபங்கள் பின்தள்ளமுடியாதவை என்று கூறும் அளவுக்கு தனது வளர்ச்சியின் உச்சக்கட்டத்தை எட்டிவிட்டது. அதனது வலுப்படுத்தல் உலக அரங்கில் முதலாளித்துவத்தின் செயற்பாட்டுப் பரப்பைக் குறுகலாக்குவதற்கு இட்டுச் சென்றது, தொடர்ந்தும் இட்டுச் செல்கின்றது. அக்டோபர் புரட்சியின் கருத்துக்களால் செல்வாக்கு செலுத்தப்பட்டவர்களும், இயங்கிவரும் சோஷலிஸத்தால் ஆதரவளிக்கப்படுபவர்களுமான, முன்னைய காலனிகளிலும், அரைக் காலனிகளிலும் உள்ள மக்கள் சுதந்திரத்தையும் விடுதலையையும் வென்றெடுத்துள்ளனர். சர்வதேச உறவுகளில் புதிய தரங்களையும் கோட்பாடுகளையும் அறிமுகஞ் செய்வதற்கு அப்பால், தனது வர்க்கக் கொள்கையின் தன்னிகரற்ற வாய்ப்புகளையும், அது நிர்ணயமாகக் காட்டியுள்ளது. இது, மக்களின் நலன்களையும் அபிலாஷைகளையும் நிவர்த்திக்கிறது. சர்வதேச உறவுகளின் அமைப்பை ஜனநாயகப்படுத்துவதற்கு இட்டுச் செல்வதோடு, நவீன உலகத்தின் மீது, என்றுமில்லாத அளவு ஆழமான தாக்கத்தையும் செலுத்துகின்றது.

புரட்சிகர தந்திரோபாயங்களைப் பற்றி விவாதிக்கும்போது, இரண்டு முக்கியமான அம்சங்களை லெனின் விசேடமாகக் குறிப்பிடுகின்ருர். முதலாவது அம்சம் என்னவெனில் உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் மீது சோஷலிஸத்தினது செல்வாக்கின் நெம்புகோலாக இருப்பது அதனது

பொருளாதாரக் கொள்கையும், உழைக்கும் மக்களினது, உற்பத்திச் சக்தியின் பொருளாயத நல்வாழ்வு, கலாசாரம் ஆகியவற்றில், முதலாளித்துவத்தின் கீழ் இருந்ததைவிட ஒரு உயர்வான மட்டத்தை உறுதி செய்யும் புதிய அமைப்பின் பொருளாதார தொழில்நுட்ப அடிப்படையைத் தோற்றுவிப்பதும் ஆகும். இரண்டாவது அம்சம், வளர்ச்சியடைந்த நாடுகளிலுள்ள சோஷலிஸ பாட்டாளிகளது புரட்சிகர இயக்கத்தின் ஆதரவும்,... பொதுவாக, எல்லா நாடுகளிலுமுள்ள விசேடமாக, காலனிகள் மற்றும் சார்பு நாடுகளிலுள்ள ஜனநாயக மற்றும் புரட்சிகர இயக்கத்தின் ஆதரவும் ஆகும்.

எமது கட்சியாலும் எல்லா மார்க்ஸிஸ்ட்—லெனினிஸ்டுகளாலும் இந்தக் கோட்பாடுகள் துரிதமாகச் செயல்படுத்தப்படுகின்றன. உலகின் ஏனைய பிராந்தியங்களிலும் புரட்சிகர நிகழ்வுப் போக்குகளுக்கு சோஷலிஸம் உத்வேகமூட்டுகின்றது. ஆனால், பூர்ஷ்வா பிரச்சாரர்கள் அவதூறு பொழிவதைப் போல் ''புரட்சியை ஏற்றுமதி'' செய்யாமல் வேறு மார்க்கங்களிலேயே மேற்கொள்கின்றது. இதில் சோஷலிஸத்தின் பிரதான ஆயுதமாகத் திகழ்வது, உதாரணமாக, முதலாளித்துவத்தின் மீதான தனது மேம்பாடே என்பது மிகவும் தெளிவானதாக உள்ளது.

## சமாதானத்திற்கும், சமூக முன்னேற்றத்திற்குமாக

மாபெரும் அக்டோபர் புரட்சியானது, மனித குலத்தின் வரலாற்றுப் போக்கில் நிர்ணயமான செல்வாக்கைச் செலுத்தியுள்ளது. கடந்த ஆறு தசாப்தங்களில் தேசிய விமோசன இயக்கத்தை, தொழிலாளர் வர்க்கப் போராட்டத்துடன் இரண்டறக் கலந்து அதைத் தனியானதோர், புரட்சிகர இயக்கமாக ஆக்குவதே உலக வளர்ச்சியின் தனித்துவமான அம்சமாகும்.

லெனினது ஆணையைப் பின்பற்றும் எமது கட்சி, தேசிய விமோசனம், மற்றும் போராடும் மக்களுடன் சர்வதேசியவாத நல்லுறவு ஆகியன சம்பந்தப்பட்ட பிரச்னைகளுக்குத் தீவிரமான கவனத்தை செலுத்திவருகின்றது. தற்போதைய நிலைமையில், தேசிய விமோசனப் போராட்டத்தின் சமூகத் திசையமைவு பற்றிய லெனினது ஆய்வுரை விசேட முக்கியத்துவமிக்கதாகும்.

''உலகப் புரட்சிக்காக நடைபெறவுள்ள நிர்ணயமான போராட்டத்தில், ஆரம்பத்தில் தேசிய விமோசனத்தை நோக்கி திசைப்படுத்தப்பட்டதும், பூகோளார்ந்த ஜனத்தொகையில் ஏகப் பெரும்பான்மையினரைக் கொண்ட இயக்கமானது முதலாளித்துவத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிராகத்திரும்பி, சிலவேளைகளில் நாம் எதிர்பார்ப்பதைவிட மேலும் அதிகமான புரட்சிகரப் பாத்திரத்தை வகிக்கவும் கூடும்''2. என்று மூன்றாவது கொமிண்டர்ன் காங்கிரஸில் பேசும்போது தனது நம்பிக்கையை லெனின் தெரிவித்தார்.



இன்று, இவ்வாறுதான் விஷயங்கள் நடைபெறுகின்றன. சமூக மற்றும் தேசிய விமோசனததிற்கான போராட்டமே இப்போது முன்னணியில் பிரத்தியட்சமாகத் திகழ்கின்றது. லெனின் அவற்றின் வாய்ப்புக்களை வெளிப்படுத்தினரே, அந்த உலக சோஷலிஸத்தினதும், தேசிய விமோசன இயக்கத்தினதும் நேயவுறவானது புரட்சிகரப் போக்கை துரிதப்படுத்துகின்றது. மனித குலம் அனைத்தினதும் நலன்களில் உலக வளர்ச்சியின் ஜீவாதாரமிக்கப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணவும் பங்களிக்கின்றது.

சமாதானம், ஜனநாயகம் மற்றும் சோஷலிஸத்திற்கான இயக்கமானது, தேசிய விமோசனத்திற்கான போராட்டத்துடனும், வர்க்கப் போராட்டத்துடனும், ஏகபோக மூலதனத்திற்கும், பிற்போக்கிற்கும் எதிராக ஒன்றிணைகின்றது. உழைக்கும் மக்களின், முற்போக்கு மற்றும் புரட்சிகர சக்திகளின் செல்வாக்கை, யாவற்றுக்கும் மேலாக, பாட்டாளி வர்க்கத்தினதும் அதனது வர்க்க ஸ்தாபனங்களினதும் செல்வாக்கை அதிகரிக்கின்ற அதேவேளையில், முதலாளித்துவ நாடுகளில் உள்ள சமூக—அரசியல் சக்திகளது வலுநிலையிலும் இணக்க அமைதி தனது தாக்கத்தைக் கொண்டிருக்கிறது. உழைக்கும் மக்களின் ஜீவாதார நலன்களுக்கும் அடிப்படையான தேசிய நலன்களுக்கும் நாடுகளின் சமாதானம், பந்தோபஸ்திற்குமான போராட்டத்தில் தனது முன்னணிப் பாத்திரத்தை மேன்மேலும் உறுதி செய்வதற்கான புதிய வாய்ப்புகளைத் தொழிலாளர் வர்க்கம் கொண்டிருக்கிறது.

லெனினிய வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும், சோவியத் அரசும், நீடித்த சமாதானததிற்கான பாதை மலர் மஞ்சம் அல்ல என்பதை நன்கறிந்துள்ளன. சமாதான இலட்சியங்கள் தன்னை வெகுவாக ஆதரிப்பவர்களை மாத்திரமன்றி, தீவிரமாக எதிர்ப்பவர்களையும கொண்டிருக்கின்றன. சோவியத் யூனியனும் ஏனைய தோழமைமிக்க சோஷலிஸ நாடுகளும் சமாதானம் மற்றும் சோஷலிஸத்தின் எதிரிகளது சூழ்ச்சி

---

2. வி. ஐ. லெனின் தொகுப்பு நூல்கள், பா; 32 ப. 482.

களை முறியடித்துவரும் அதே வேளையில், சமாதானத்தை, சமூக முன்னேற்ற நோக்கங்களுக்குச் சாதகமாக சர்வதேச நிலைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்தவும் உழைத்துவருகின்றன. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடு நீடுறுதிமிக்கது, தெளிவானது. தற்காலிக லாபங்களுக்கு அது உட்படவில்லை; ஏனெனில், சமாதானம் மற்றும் சமூக முன்னேற்றத்தின் புனிதமான நோக்கங்களையும் உயர்த்திப்பிடிப்பதற்கும் அதன்மூலம், சோவியத் மக்களினதும் புவியிலுள்ள எல்லா சீரிய மக்களினதும் மகிழ்ச்சியை உறுதிசெய்வதற்கும் ஒரேவழி இது மாத்திரமே.

சமூக வாழ்வை புனருத்தாரணம் செய்வதற்கான, வரலாற்றுரீதியாகவே தவிர்க்கமுடியாத நிகழ்வுப் போக்கைப் பின்தள்ளக் கூடிய எந்த சக்தியும் எமது காலத்தில் இல்லை. வெகுஜன மக்கள் உலகை மாற்றுவதற்கு விழைகின்றனர். அவர்கள் விரும்பினுல் அதை மாற்றியே தீருவர்.

*கம்யூனிஸ்ட் இல. 10, 1977*

# சோவியத் சமுதாயம்: வாழ்வும் பிரச்னைகளும்

- ★ வலிமையினதும் சக்தியினதும் ஊற்றுக்கண்
- ★ சோவியத் உஸ்பெகிஸ்தான்

எஸ். ரஷிதோவ்
சோ. யூ. க. க. மத்தியக் கமிட்டி அரசியல் குழுவினது அபேட்சக உறுப்பினர்.
உஸ்பெக்கிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி முதற் செயலாளர்

# வலிமையினதும் சக்தியினதும் ஊற்றுக்கண்

> சமூக ஒடுக்கு முறையை அழித்தொழிப்பதாலும் வெகுஜனங்களுக்குச் சாதகமான சமூக மாற்றங்களை மேற்கொள்வதாலும் மாத்திரமே தேசிய இனப் பிரச்னைக்குத் தீர்வு காண முடியும் என்று மார்க்ஸிய—லெனினியம் கருதுகிறது. இந்த நிலைப்பாடு, சோ. சோ. கு. ஒன்றியத்தில், விசேஷமாக சோவியத் மத்திய ஆசியக் குடியரசுகளில் சோஷலிஸ நிர்மாண நடவடிக்கையின் போது உறுதியாக உயர்த்திப் பிடிக்கப்பட்டது.

புதிய வரலாற்று நிலைமை, மற்றும் புரட்சிகரமான நடவடிக்கையில் காணப்படும் சமூகப் பரிணும விதிகளிலிருந்து மார்க்ஸ். எங்கெல்ஸ் ஆகியோரின் தத்துவங்களை லெனின் சாதுர்யமாக விருத்தி செய்தார். தேசிய இனப் பிரச்சினை பற்றிய ஒருங்கிணைந்ததும், முரணில்லாததுமான போதனையைத் தயாரித்தார். கட்சியின் தேசிய இனக் கொள்கைக் கோட்பாடுகளை வகுத்தார். தேசிய இனப் பிரச்னை பற்றிய கட்சியின் வேலைத்திட்டச் சுருக்கத்தை லெனின் பின்வருமாறு வகுத்தமைத்தார்:—



தேசங்களின் முழுமையான சமத்துவம், அவைகளின் சுய நிர்ணய உரிமை, எல்லாத் தேசங்களையும் சேர்ந்த தொழிலாளர்களினது ஐக்கியம்—ஆகியவையே இவை.

சோஷலிஸத்தின் வெற்றி மாத்திரமே பழைய உலகத்திற்கு—தேசிய ஒடுக்குமுறை, தேசியக் குரோதம், மற்றும் தேசியத் தனிமைப்பாடு ஆகியவற்றின் உலகத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும், எல்லாத் தேசங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்களின் ஐக்கியத்தினுல் ஆன புதிய உலகத்திற்கு வழி சமைக்கும், இத்தேசங்களில் சிலருக்கு மாத்திரமேயான சலுகைகள் இருக்காது, மனிதனை மனிதன் ஒடுக்குவது இருக்காது என்று லெனின் சுட்டிக் காட்டினர். அக்டோபர் புரட்சிதான் சர்வதேசியப் பாதகையின் கீழ் நிறைவேற்றப்பட்ட முதலாவது புரட்சியாகும்.

அக்டோபர் புரட்சியின் கருத்துக்கள்தாம், எல்லா மக்களுக்கும் நெருக்கமானதாகவும் அவர்களின் விருப்பத்திற்குப் பாத்திரமானதாகவும் இருந்தது. புரட்சிகரமான மாற்றங்களுக்கான போராட்டத்தில் அவர்களை அணிதிரட்டியது. சுரண்டல் அமைப்பைத் தூக்கிவீசியதிலும், சோவியத் ஆட்சி அதிகாரத்தை நிலைநிறுத்துவதிலும் ருஷ்யாவிலுள்ள எல்லா உழைப்பாளி மக்களும் செயலூக்கத்துடன் பங்குபற்றினர்.

## சோஷலிஸத்தின் மகத்தான லாபங்கள்

புதிய, சோஷலிஸ பல்தேசிய ராஜ்யத்தைக் கட்டி எழுப்பும் பணியை அக்டோபர் புரட்சி முன் வைத்தது. சுயாதிபத்தியமிக்க தேசிய சோவியத் குடியரசுகள் தமது ஆரம்பகாலந் தொட்டே, விரிவான ஒத்துழைப்பை ஏற்படுத்தவும், பொருளாயத, ஆன்மீக, தேசிய நலன்களை உறுதி செய்யும் ஸ்திரமான ராஜ்ய ஒன்றியத்தின் வரம்பிற்குள் நெருக்கமான உறவுகளை ஸ்தாபிக்கவும் விழைந்தன. 1922ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைப்பு இயக்கம் சோவியத் சோஷலிஸக் குடியரசுகளது ஒன்றியம் ஸ்தாபிக்கப்படுவதில் முற்றுப் பெற்றது.

சோவியத் ஒன்றியத்தினது தோற்றமும் அதனது வெற்றிகரமான வளர்ச்சியும், மாபெரும் அக்டோபர் புரட்சியினது இலட்சியங்களின் நேரடியான தொடர்ச்சியையும், மக்களை ஐக்கியப்படுத்துவதில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி எடுத்துக் கொண்ட தளராத முயற்சியினை

வெளிப்படையும், லெனினது தேசிய இனக் கொள்கையின் வெற்றியையும், சோஷலிஸத்தின் மகத்தான லாபத்தையும் பிரதிநிதித்துவம் செய்கின்றன. கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையில் காணப்படும், தேசங்களுக்குள் வர்க்கப் பகைமைகளுடன் சேர்ந்து தேசியக் குரோதமும் மறைந்தொழிந்துவிடும் என்ற தீர்க்கதரிசனமான சொற்களை எதார்த்தபூர்வமானதாக ஆக்கின.

பாதை எளிதானதாக இருக்கவில்லை. கட்சி, சொல்லொணாத் துன்பங்களைச் சகிக்கவேண்டி நேர்ந்தது. மக்களின் தேசிய எழுச்சிப் போக்கை, சோஷலிஸ வளர்ச்சிப் பாதையில் வழிப்படுத்துவதும், நாட்டின் ஒதுக்குப்புறங்களிலுள்ள மக்களுக்கு செயலூக்கமுள்ள உதவியை உறுதி செய்வதும், சோஷலிஸத்தை நிர்மாணிப்பதில் மக்களின் நெருக்கமான ஒத்துழைப்பை உறுதி செய்வதும் தவிர்க்க முடியாததாக விருந்தது.

மத்திய ஆசியாவில் உள்ள சோவியத் குடியரசுகள் நிலப்பிரபுக்களுக்கும், பூர்ஷ்வா தேசியவாதிகளுக்கும் எதிரான, பாஸ்மாச்சி கோஷ்டி மற்றும் வெளிநாட்டுத் தலையீட்டாளர்களுக்கும் எதிரான கடுமையான வர்க்கப் போராட்டத்தில் பிறந்தவையாகும். இந்தப் போராட்டத்தில் இவை தனிமைப்பட்டு இருக்கவில்லை, சோவியத் ருஷ்யாவிலுள்ள மக்களின் தோழமைமிகுந்த ஆதரவையும், பன்முகப்பட்ட இராணுவ மற்றும் பொருளாதார உதவியையும் பெற்றிருந்தன.

மக்களையும் இனமரபுக் குழுக்களையும் உயர்த்துவதில் கட்சி தன்னாலான அனைத்தையும் செய்தது; வளர்ச்சியடைந்த நாடுகளுடைய மட்டத்தோடு ஒப்பிடுகையில் இம் மக்களும் இன மரபுக் குழுக்களும், அரை-நிலப் பிரபுத்துவ மற்றும் குல மரபு உறவுகளின் கட்டத்திலேயே இருந்தன. இவை, தமது பொருளாதாரங்களைக் கட்டி எழுப்புவதிலும், தேசிய ஆளணிகளைப் பயிற்றுவிப்பதிலும் கலாசாரத்தை வளர்ப்பதிலும், எல்லா தேசிய இனங்களையும் சேர்ந்த உழைக்கும் வெகுஜனங்களின் அன்பையும் எல்லையில்லா நம்பிக்கையையும் வென்றெடுத்திருந்த மாபெரும் ருஷ்ய மக்கள் உன்னதமான பாத்திரத்தை வகித்தனர்.

ஏற்கனவே, 1919ம் ஆண்டு இலையுதிர் காலத்தின் போது, துணையில்லாமலும், தேவையால் வாடியும் இருந்த ருஷ்யா தனதுமிகக்குறைவான வரவு செலவுத்திட்டத்திலிருந்து. பொன்னான 5 கோடி ரூபிள்களை துருக்கெஸ்தானின்[1] நீர்ப்பாசன வேலைகளுக்கு லெனினது ஆணையின் கீழ் ஒதுக்கீடு செய்தது. ருஷ்ய சமஷ்டியில் உள்நாட்டு யுத்தத்தின் போது, கிழக்கத்தைய குடியரசுகளுக்கு நிதியுதவியையும்



தொழில்நுட்ப உதவியையும், உணவையும் வழங்குவது சம்பந்தமாக ஜீவாதாரமிக்க முடிவுகள் எடுக்கப்பட்டன. அதன் பின்னரான ஆண்டுகளில், உலோகம், சாதனம், பொருட்கள் ஆகியவற்றைச் சுமந்த புகை வண்டிகளும், நிபுணர் குழுக்களும், உஸ்பெக்கிஸ்தானுக்கும் ஏனைய குடியரசுகளுக்கும் வந்து சேர்ந்த வண்ணமே இருந்தனர்; இவர்கள், மாஸ்கோவிலிருந்தும், லெனின் கிராடிலிருந்தும் யூரல் நகரங்களிலிருந்தும், நாட்டிலுள்ள ஏனைய தொழில்துறை கேந்திரங்களிலிருந்தும் வந்தனர்.

இன்று, லெனினது தேசிய இனக் கொள்கையின் சர்வதேசிய குணும்சம், எல்லோரும் காணும் வகையில், ஆழப் பதியத்தக்கதாக உள்ளது. உண்மையிலேயே மாபெரும் அக்டோபரும், சோஷலிஸமும், பாட்டாளி வர்க்க சர்வதேசிய, மக்களின் நட்புறவுத் தத்துவங்களை நடைமுறைப்படுத்தியிருக்கின்றன. புதிய சமுதாயத்தை நிர்மாணிக்கும் நிகழ்வுப் போக்கில் சர்வதேசியவாத சூழல் முன்னுணரப்பட்டது. கடந்த காலத்தால் வீட்டுச் செல்லப்பட்ட, நாடுகளிடையேயான பராதீனமும் அவநம்பிக்கையும் அகற்றப்பட்டன, உழைக்கும் மக்களின் முரணில்லாத தோழமை சார்ந்த ஐக்கியம் நிலைநாட்டப்பட்டது.

சோவியத் அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் அதியுயர் வளர்ச்சியடைந்ததும், பெருவீதத்தில் இயந்திரமயமாக்கப்பட்டதுமான விவசாயம் தோற்றுவிக்கப்பட்டது. எல்லாக் குடியரசுகளிலும் விஞ்ஞானமும் கலாசாரமும் முன்னேறின. இவ்வாறு தேசங்கள் மத்தியில் இருந்துவந்த முன்னைய ஏற்றத்தாழ்வு அழித்தொழிக்கப்பட்டது. இப்போது சோவியத் பொருளாதாரம் ஒருங்கிணைக்கப்பட்டதாக உள்ளது. ஒவ்வொரு குடியரசினதும், நாடு முழுவதினதும் நலன்களை உள்ளடக்கியுள்ள தனியானதொரு அரசாங்கத் திட்டத்திற்கு இசைவான வகையில் வளர்ந்து வரும், இடைச் செயற்பாடுமிக்க தேசியப் பல்திறம் வாய்ந்தவொன்றுக இருக்கிறது. இந்த காலகட்டத்தில், ஒரே தன்மையுள்ள சமூகக் கட்டமைப்பைக் கொண்ட சோஷலிஸ ராஜ்யங்களின், தேசிய இனங்கள் உருவாகின; தொழிலாளர் வர்க்கம், கூட்டுப்பண்ணை விவசாயிகள். உழைக்கும் அறிவுத் துறையினர் ஆகியோரை உள்ளடக்

---

1. 1917ம் ஆண்டின் மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்கு முன்னர், புரட்சிக்கு முன்னரான ஆரம்ப ஆண்டுகளில், இப்போது, உஸ்பெக், துருக்மென், தாஜிக், கிர்கீஸ், என அழைக்கப்படும் பிரதேசங்களும், கஸாக் சோவியத் சோஷலிஸக் குடியரசின் தென் பகுதியும், துருக்கெஸ்தான் என அழைக்கப்பட்டன.

கியதே இச் சமூகக் கட்டமைப்பாகும். சோவியத் மக்கள், தமது அறிவுத்துறை வளர்ச்சியிலும், தம் கலாசாரத்திலும் அளவற்ற முன்னேற்றத்தை அடைந்துள்ளனர்; இவை உள்ளடக்கத்தில் சோஷலிஸமாகவும், வடிவத்தில் தேசியத் தன்மையாகவும் உருப்பெற்றுள்ளன கலாசார முன்னேற்றத்தின் பயனுள்ள நிகழ்வுப் போக்கும், கலாசாரங்களைப் பரஸ்பரம் செழுமைப்படுத்துவதும் மேலும் நெருக்கமாகக் கொண்டுவருவது இப்போது நடைபெற்று வருகின்றது. மார்க்ஸிய—லெனினிய சித்தாந்தம் உறுதியாக வேர்விட்டுள்ளது.

இவை எல்லாமே, மக்கள் மத்தியில் நட்புறவு தோழமைமிக்க ஒத்துழைப்பு, சமத்துவம், பரஸ்பரம் நம்பிக்கை ஆகியவற்றின் மீது சார்ந்துள்ள அடிப்படையிலேயே வித்தியாசமான தேசிய உறவுகளின் வடிவம் சோவியத் ஒன்றியத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது என்பதற்குச் சான்று பகர்கின்றன. இந்நாடுகளின் சமாஜமானது மிகவும் கடுமையான சோதனைகளில், விசேஷமாக 1941 – 1945ல் நடைபெற்ற மாபெரும் தேசபக்த போரின் போது, சமூக, அரச அமைப்பும், சோஷலிஸ சித்தாந்தமும், சோவியத் மக்களின் நட்புறவும் தோழமைமிக ஐக்கியமும் தமது மீறவொண்ணுமையை நிரூபித்துக் காட்டின. பாஸிஸ்ட்டுகளின் மீதும், இனவெறி, தேசியக் குரோதம் ஆகியவற்றிலான ஏகாதிபத்தியவாத சித்தாந்தத்தின் மீதும் வெற்றியை ஈட்டின.

சோவியத் யூனியனது பலத்தின் பிரதான வளமானது, தோழமைமிக்க ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி, மக்களின் ஐக்கியம் ஆகியவற்றிலேயே தங்கியிருக்கிறது. மகத்தான நட்புறவின், மீறவொண்ணாத தோழமையின் விளைவால், மக்களின் அர்ப்பணிக்கப்பட்ட பணியின் விளைவால், சோவியத் ஒன்றியத்தில் வளர்ச்சியடைந்த சோஷலிஸச் சமுதாயம் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. சோவியத் வாழ்க்கை முறை வலுப்படுத்தப்பட்டுள்ளது.

சமூக வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் ஏற்படுத்தப்பட்ட பாரிய சமூகப் பொருளாதார மாற்றங்களின் விளைவாலும், லெனினது தேசிய இனக் கொள்கை முரணின்றி செயல்படுத்தப்பட்டதாலும் ஒரு புதிய வரலாற்றுச் சிறப்புமிக்க சமாஜம்—சோவியத் மக்கள்—தோன்றியுள்ளது. சோவியத்துக்களின் பூமியில் வாழும் லட்சக் கணக்கான மக்களின் உழைப்பாலும், தீரமிக்க, படைப்பாற்றல் மிக்க மேதையினாலும் உருவானவற்றிற்கான தேசியக் கௌரவம்—உன்னதமானதும், பிரமாண்டமானதுமான தேசபக்த உணர்வினைக் கொண்டதே இச் சமாஜமாகும்.



சோஷலிஸ அமைப்பின் வெற்றி, மக்களின் வாழ்க்கை முறையிலும் வாழ்க்கை நிலைமைகளிலும், தோற்றத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. நாடு முழுவதிலும் உள்ளதைப் போலவே உஸ்பெக்கிஸ்தானிலும், தனது சித்தாந்தரீதியான பற்றுறுதி, ஆக்கபூர்வமான ஆற்றல், பரந்த தோற்றம், ஆகியவற்றால் சிறப்பு பெற்றுள்ள, உழைப்பிலும், சமூக அரசியல் வாழ்விலும் செயலூக்கமுள்ள புதிய மனிதனைக் காண்கிறோம்.

வாழ்க்கையும், புதிய சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதும் சோவியத் மக்களின் பணியைச் சர்வதேசியமயமாக்குவதை உத்வேகப்படுத்துகிறது. சோவியத் மக்கள் மத்தியில் பெருமளவிலான நட்புறவுக் கருத்துக்களும், உழைக்கும் மாந்தரின் சர்வதேசியத் தோழமையும், சர்வதேசியமும், 1976ம் ஆண்டு பெப்ருவரி - மார்ச்சில் நடைபெற்ற சோ. யூ. க. க.வின் 25வது காங்கிரஸினது முடிவுகளின் உயிர்ப்பண்பாய்த் திகழ்கின்றன. சோவியத் சோஷலிஸ சமுதாயத்தின்—உண்மையான நன்னம்பிக்கையும், மக்களின் சமத்துவமும் கொண்ட சமுதாயத்தின்—தார்மீக, அரசியல் இசைவிணக்கத்தை மேலும் வளர்க்கவும் வலுப்படுத்துவதற்குமான வழிகாட்டிகளை இக்காங்கிரஸ் வகை செய்துள்ளது.

## வலிமைமிக்க விசை

நாட்டினது வளர்ச்சியின் புதிய கட்டத்தில், கம்யூனிஸ நிர்மாணக் கட்டத்தில், சோவியத் தேசபக்த, பாட்டாளி வர்க்க சர்வதேசியம், சோஷலிஸத் தாயகத்திற்கான கௌரவம், குரோதமான சித்தாந்தத்திற் கெதிரான சமரசம் காணமுடியாத போராட்டம் ஆகிய உணர்வை உழைக்கும் மக்களுக்குப் புகட்டுவதில் கட்சி ஸ்தாபனங்களின் பணி மேலும் முக்கியமானதாக உள்ளது.

உஸ்பெக்கிஸ்தானின் கட்சி அமைப்பானது, மக்களுக்கு உயர்ந்த தத்துவார்த்த, அரசியல் தன்மைகளை வழங்கவும், அவர்களின் தேசபக்த மற்றும் சர்வதேசியவாதக் கல்வியின் வடிவங்கள், உள்ளடக்கங்களை முழு நிறைவாக்கவும், ஆக்கபூர்வமாகவும் கடுமையாகவும் பாடுபடுகிறது. ஸ்தாபன மற்றும், அரசியல் பணிகளில் விரிவான அணுகுமுறையைக் காட்டவும் அது விழைகின்றது.

இந்த தோழமையுள்ள நேச அணி, எமது வலிமையையும், ஆற்றலையும் பல்கிப் பெருகச் செய்கின்றது, தேசியப் பொருளாதாரம் முழுவதினதும் முன்னேற்றத்தை விரைவுபடுத்துகிறது.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தின் (1976-1980) ஒவ்வொரு தினத்தையும் புரட்சிகரமான முயற்சியுணர்வு குறித்துக் காட்டுகின்றது. மூலதன நிர்மாணம் அளப்பரிய அளவினை எட்டியுள்ளது, விவசாயம் துரிதமாக வளர்கிறது.

சோவியத் ஆட்சி நடைபெறும் ஆண்டுகளின் போது, தொழில்துறை உற்பத்தி எமது குடியரசில் 240 தடவைகளால் அதிகரித்துள்ளது என்பதையிட்டு நாம்பெருமையடைகின்றோம். உலோகவியல், இயந்திரவியல் மற்றும் விசைப் பொறியியல், எண்ணெய், வாயு அகழ்வு, விமான நிர்மாணம், உலக்ரோனிக்ஸ், இரசாயனம். சுரங்கத் தொழில் போன்றவை உட்பட நூற்றுக்கும் அதிகமனே தொழில்கள் எம்மிடம் உள்ளன. இவை எல்லாவற்றையும் மக்களின் சோஷலிசக் குடும்பத்தில் மாத்திரமே எய்தப்பட முடியும் என்பதை நாம் பூரணமாக உணர்கின்றோம். இதில்தான், எமது தோழமையின் மனநிறைவு தரும் பெறுபேறுகளை நாம் காண்கின்றோம்.

சோவியத் பொருளாதார வளர்ச்சியில், தனக்கென ஒரு விசேடமான இடம் ஒவ்வொரு குடியரசிற்கும் இருக்கிறது. உஸ்பெக்கிஸ்தானில் பருத்தி உற்பத்தியானது, தேசிய நல்வாழ்வுக்கான அதன் பாரிய பங்களிப்பாகும்.

சோவியத் அரசானது ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் போது எமது குடியரசிலிருந்து 245 லட்சம் தொன் ''வெண் தங்க''த்தைப் பெற்றது; இத் திட்டத்தால் முன்வைக்கப்பட்டதை விட 2300 ஆயிரம் தொன் அதிகமானதாகும். இது, ஆண்டொன்றுக்கான அறுவடைக்கு ஏறக்குறைய சமமானதாகும். ஆகக் கூடிய அளவு நீர்ப் பஞ்சம் இருந்தபோதிலும் கூட, 1976ம் ஆண்டின் மகசூல் 5338 ஆயிரம் தொன்களை எட்டியது.

★

சோவியத் ஆட்சியின் தொடக்கத்தில் லெனின் எழுதினர்; எல்லா நாடுகளிலுமுள்ள லட்சோப லட்சம் மக்களின் சொந்த வலிமையில் நம்பிக்கையை எழுச்சியுறச் செய்தோம், அவற்றின் ஆர்வத் தீயைத் தூண்டிவிட்டோம்.''2

புரட்சிகர ஆர்வத்தின், ஆக்க முயற்சியின், நட்புறவின், தோழமையின், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் இந்த நெருப்பை எந்தப் புயலாலும் அணைத்துவிட முடியாது. சமூக முன்னேற்றத்திற்கும் கம்யூனிஸத்திற்குமான சோவியத் மக்களினதும், உலகம் முழுவதிலுமுள்ள உழைக்கும் மக்களினதும் பாதையில் அது எப்போதுமே ஒளிவீசும்.

2. வி. இ. லெனின், தொகுப்பு நூல்கள் தொகுதி 27— ப. 160.

புள்ளி விபரங்கள்

# சோவியத் உஸ்பெக்கிஸ்தான்

★ அறுபது ஆண்டுகளில் சுமார் 1400 பெரிய தொழிலகங்கள் சோவியத் உஸ்பெக்கிஸ்தானில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன, இவற்றின் ஆறு நாள் உற்பத்தி, 1918ம் ஆண்டு முழுவதினதும் உற்பத்திற்குச் சமமானதாகும்.

★ சோவியத் யூனியனின் கச்சா பருத்தி உற்பத்தியில் 65 சதவீதம் உஸ்பெக்கிஸ்தானில் பெறப்படுபவையாகும். கடந்த ஐந்தாண்டு காலங்களில் பருத்தி அறுவடை 3 மடங்காக அதிகரித்தது, ஹெக்டர் ஒன்றிற்கு 80 சென்ட்னர் சராசரி மகசூலைத் தந்துள்ளது.

★ குடியரசிலுள்ள கூட்டுப்பண்ணையிலும் அரசாங்கப் பண்ணையிலும் 138,000 டிராக்டர்களும், 30,000 பருத்தி கொய்யும் அறுவடை இயந்திரங்களும், ஆயிரக்கணக்கான இதர இயந்திரங்களும், இயந்திர சாதனங்களும் வேலையிலீடுபட்டுள்ளன.

★ சுமார் 30 லட்சம் ஹெக்டர் நிலம் நீர்ப்பாசனமளிக்கப்பட்டவையாகும். விரிவான நில அபிவிருத்தித் திட்டத்திற்கு பத்தாம் ஐந்தாண்டுத் திட்டம் (1976—1980) வகை செய்கிறது. இதில், கார்ஸின்ஸ்காயா மற்றும் தலிக்காஸ்காயா வெளிகளிலும், அமு தார்தா தாழ்நிலத்திலும் இதர பகுதிகளிலுமுள்ள 500,000 ஹெக்டர் நிலம் அபிவிருத்தி செய்வதும் அடங்கும்.

★ குடியரசில் அண்மையில் ஸ்தாபிக்கப்பட்ட புதிய தொழில்பிரிவு — சூரியஒளி இயந்திரவியலாகும். 1977ம் ஆண்டில், புஹாராவிற்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இத் தொழிலகம், சூரிய சக்தியைப் பயன்படுத்துவதற்கான சாதனங்களை உற்பத்தி செய்வதில் விசேட கவனஞ் செலுத்துகின்றது.

★ 1917ம் ஆண்டில் நடைபெற்ற மாபெரும் அக்டோபர் புரட்சிக்கு முன்னர், உஸ்பெக்கிஸ்தானில் உயர் கல்வி ஸ்தாபனங்களோ, விசேட நடுத்தரப் பள்ளிகளோ இருக்கவில்லை. இன்று குடியரசிலுள்ள 44 கல்லூரிகளிலும் கழகங்களிலும் 254,000க்கும் அதிகமான மாணவர்கள் பயில்கின்றனர்.

★ உயர்தர அல்லது நடுத்தரக் கல்வியைப் பெற்ற 800,000 மக்களை உஸ்பெக்கிஸ்தானின் தேசியப் பொருளாதாரம் வேலைக்கமர்த்தியுள்ளது. இந்த எண்ணிக்கை புரட்சிக்கு முன்னர் ருஷ்யா முழுவதிலும் எண்ணிக்கையை விட நான்கு மடங்கு அதிகமானதாகும்.

இஸ்வெஸ்தியா செப்டெம்பர், 13, 1977

# உலக சோஷலிஸ சமாஜம்

★ பரஸ்பரம் நலன் மிக்க ஒத்துழைப்புகள்

ஓ.பொகொமொலொவ்
சோவியத் விஞ்ஞானப் பேரவை துணை உறுப்பினர்

# பரஸ்பரம் நலன்மிக்க ஒத்துழைப்புகள்

ப.பொ.உ.க. நாடுகளுக்கிடையேயான பொருளாதார பந்தங்கள் அவை ஒவ்வொன்றின் பொது முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் ஊக்குவிக்கின்ற புதியவடிவமும் வகையுமாகத் திகழ்கின்றன.

பொருளாதார ஒருமைப்பாட்டிலான சோஷலிஸ சமாஜத்தின் வெற்றிகள் பெருகப் பெருக பூர்ஷ்வா பிரசாரத் தாக்குதலும் மேலும் வன்மையாகி வருகிறது. சகோதர நாடுகளுக்கிடையேயான நெருக்கமான உறவுகளின் குணும்சம், நோக்கம், பலன்கள் என்பவற்றைத் திரித்துக்கூறும் முனைப்பில் பூர்ஷ்வா பிரசாரமானது, தமது தொழிற்துறை வளங்களில் வித்தியாசப்படுகின்ற பங்காளிகளைப் பொருளாதார ஒருங்கிணைப்பு ஒன்றுபடுத்தி உள்ளது என்பதை விகற்பப்படுத்தவும், அது அவற்றின் நலன்களை திருப்திசெய்யவில்லை என்று கூறவும் எத்தனிக்கிறது.

எல்லாப் பங்காளிகளுக்கும் ஒருங்கிணைப்பு நன்மையளிக்கிறது என்ற உண்மைக்கும் இவ்விதக் குற்றச்சாட்டுகளுக்கும் எள்ளத்தனை ஒட்டுறவும் இல்லை.

உற்பத்தி ஆற்றலைப் பெருக்குவது, மொத்த உற்பத்தித்திறனை அதிகரிப்பது, வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது என்ற நோக்கத்தில் சர்வதேச சோஷலிஸ உழைப்புப் பிரிவினையின் நன்மைகளை நல்லவிதத்தில் பயன்படுத்துவதில் சகோதர நாடுகளெல்லாம் அக்கறைகொண்டுள்ளன.



# சோவியத் யூனியனின் வளமும் ஒருமைப்பாட்டிற்கு அதன் பங்களிப்பும்

ப.பொ.உ.க. நாடுகளிடையே பொருளாதார ரீதியில் சக்திமிக்கதாகத் திகழும் சோவியத் யூனியன் ப.பொ.உ.க. வின் மொத்த தொழில் மற்றும் விவசாய உற்பத்தியில் 70 சதவீதத்தை நிறைவுசெய்வதாகத் திகழ்கிறது. மதிப்பீடுசெய்யப்பட்ட இயற்கை வளங்களின் செல்வத்தைப் பொறுத்தமட்டில் உலகின் பெரும்பாலான நாடுகளை சோவியத் யூனியன் கணிசமாக விஞ்சுவதாகவுள்ளது சோவியத் யூனியனில் உயர்ந்த விஞ்ஞான தொழில்நுட்ப வளமுண்டு, உலக விஞ்ஞான ஊழியர்களிற் காற்பங்கினர் சோவியத் விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளர்களுமேயாவர். உலோகவியல், மின்சக்தி உற்பத்தி, விமானப் போக்குவரத்து, விண்வெளி ஆராய்ச்சி மற்றும் பல விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகளிலெல்லாம் சோவியத் யூனியன் பெரும் முன்னேற்றமெய்தியுள்ளது.

ஒரேவார்த்தையில் கூறுவதானால் நீண்டகாலமாக ஏனைய ப.பொ.உ.க. நாடுகளுடன் பரஸ்பரம் நலன்மிகு ஒத்துழைப்புகளை ஸ்திரமாக விரிவாக்குவதற்கான சக்திமிகு வளத்தைக்கொண்டுள்ளது. அதன் அயல்துறை பொருளாதாரப் பிணைப்புகளும் அதிகரிப்பதோடு எண்ணற்ற பொருளாதாரத் துறைகளிலும் பெரும் பங்களிப்பைச் செய்வதாயுள்ளது. உதாரணமாக 1975ல் சோவியத் யூனியன் 35 சதவீத உருட்டப்பட்ட உலோக சாதனங்களையும், 30 சதவீத பருத்தியையும், 25சதவீத பாரம் குறைந்த வண்டிகளையும், 19 சதவீத எண்ணெய் மற்றும் இரும்புக் கனிஜங்களையும், 12 சதவீத அச்சுத் தாள்களையும் ஏற்றுமதிசெய்துள்ளது.

சோவியத் பொருளாதாரத்தின் பரிமாணம் ஓரன்பர்கிலிருந்து சோவியத் யூனியனின் மேற்கெல்லைவரையிலான வாயுக் குழாய் போன்ற குறிப்பிடத்தக்க பிரமாண்டமான ஆற்றல்மிக்க கூட்டுத் திட்டங்கள் ஏற்படுவதற்கு உதவிசெய்துள்ளது. இவையனைத்தும், ப.பொ.உ.க. வின் எல்லா பிரதான பணிகளிலும் சோவியத் யூனியன் முக்கிய பங்காளியாக இருக்க உதவுவதோடு, அவை அதன்மீது விசேட பொறுப்புகளையும் சுமத்தியுள்ளன. சகோதர நாடுகளுடன் அனைத்தம்ச உறவுகளை அபிவிருத்திசெய்வதில் சோ.க.க.வினதும் சோவியத் அரசினதும் நடவடிக்கைகளிலும் இந்த பொறுப்புணர்ச்சியானது வியாபித்துள்ளது.

## நம்பகமான பங்காளிகள்

ப.பொ.உ.க. நாடுகளின் ஒத்துழைப்பு அதிகமதிகமான நன்மைகளை ஏற்படுத்துகின்றது. இவற்றிற் பெரும்பாலான நாடுகள் கணிசமான விஞ்ஞான, தொழில்நுட்ப வளத்தைக் கட்டியெழுப்பியுள்ளன. உதாரணமாக தொழில்நுட்பப் பொறியியல், இரசாயனம், துணிகள், பாதணிகள், உணவு போன்ற தொழில்களிலான பிரதான பொருட்களின் உற்பத்திகள் சோவியத் யூனியனில் உற்பத்தியாவதைவிட அரைவாசிக்குமதிகமாகியுள்ளன. சோஷலிஸம், கம்யூனிஸம், பொதுவான சமூக அமைப்பு, நோக்கங்களின் ஒற்றுமை, சகோதரத்துவ நட்புறவு என்பவற்றைக் கட்டியெழுப்புவதிலான எய்தல்கள் என்பனவெல்லாம் சோவியத்யூனியனின் அயல்நாட்டுப் பொருளாதாரப் பிணைப்புகளில் இந் நாடுகள் முதலிடத்தை வகிப்பதையே விளக்குகின்றன. இவ்விதத்தில் தற்போதைய நீண்டகால ஒப்பந்தங்களின் கீழ் ப.பொ.உ.க. நாடுகள் மற்றும் யூகொஸ்லாவியாவுடனான சோவியத் யூனியனின் வர்த்தகப் பண்டப்புரள்வு 1976—1980ல் 14,500 கோடி ரூபிள்களை எய்தும், இது முன்னைய ஐந்தாண்டுகளின் போதிருந்ததைவிட 79 சதவீதம் அதிகமாகும்.

தமது தேசிய ஐந்தாண்டுத் திட்டங்களை ஒருநிலைப்படுத்துவதில் ப.பொ.உ.க. நாடுகள் இயந்திரங்களையும் பூரணமாக்கப்பட்ட இயந்திரத் தொகுதிகளையும் பரஸ்பரம் பரிமாறிக்கொள்ள ஒப்புக்கொண்டுள்ளன; இது முதலீட்டு நிதிகளை மட்டுப்படுத்த சோவியத் யூனியனுக்கும் ப.பொ.உ.க. நாடுகளுக்கும் உதவும், விசேடமாக பொருளாதாரத்திலான சில பிரதான கிளைகளை விரிவாக்குவதையும் மற்றும் தொழில்நுட்ப புனர்சாதனப்படுத்துவதையும் ஊக்குவிப்பதாயமையும். இவ்விதத்தில் 1976—1980ல் சோவியத் யூனியன் ப.பொ.உ.க. நாடுகளிடமிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட பூரணமாக்கப்பட்ட இயந்திரத் தொகுதிகளைப்பெறும்; இவற்றுள் ஆண்டிற்கு 60 லட்சம் தொன் கார்பமைட் உற்பத்தி ஆற்றல்கொண்ட ஆறு தொழிற்சாலைகளுக்கான சாதனங்களும், ஆண்டிற்கு ஒரு கோடி தொன் உற்பத்திசெய்யவல்ல 21 சல்பியூறிக் அமில இயந்திரத் தொகுதிகளும், 27 பாரிய வடி எந்திரங்களும், 19 நீர்க்கூறகற்றும் பாற்தொழிற்சாலைகளும் இன்னும் பலவும் அடங்கும்.

ஒன்பதாவது (1971—1975) ஐந்தாண்டுத் திட்டத்திற்போலவே ப.பொ.உ.க. நாடுகளிலிருந்து கிடைக்கும் விநியோகங்கள் உற்பத்திப்பொருட்களின் பல ரகங்களுக்கான சோவியத் தேவைகளை ஈடுசெய்யும். இவ் விநியோகங்களில் புதிய தன்னியக்க தொலைபேசி நிலையங்களுக்கான சாதனங்களிற் பாதிப்பகுதியும் 40 சதவீத புதிய பிரயாணக் கார்களும், 12 சதவீத பஸ்களும், புதிய உருட்டப்பட்ட சாதனங்களில் மூன்றிலொரு பகுதியும், 15 சதவீதத்திற்குக் குறையாத தளபாடங்கள், பாதணிகள், தயாரிக்கப்பட்ட உடைகள், பழங்கள், தகரத்திலடைக்கப்பட்ட பழங்கள் மற்றும் காய்கறிகள் என்பனவும் அடங்கும். அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் சோவியத் யூனியன் ப.பொ.உ.க. நாடுகளிலிருந்து 3000 லட்சம் சோடி பாதணிகளை இறக்குமதி செய்யும்.



சோவியத் யூனியனின் நிரந்தரமான, பெருமளவிலான இறக்குமதித் தேவைகள் எமது பங்காளிகளுக்குப் பெருந்தொகையான உற்பத்திக்கான சிறந்த நிபுணத்துவத்தை உருவாக்கவும் அபிவிருத்தி செய்யவும் சந்தர்ப்பங்களை வழங்குகிறது.

## திட்டங்களினதும் வர்த்தக பண்டப்புரள்வினதும் சமநிலை

சோஷலிஸ ஒருமைப்பாடு தன் எல்லா பங்காளிகளுக்கும் நன்மைசெய்கிறது. சோவியத் யூனியனைப் பொறுத்தமட்டில் சோ.க.க.வின் 25வது காங்கிரஸால் திட்டமிடப்பட்ட பொருளாதார அபிவிருத்திக் கடமைகளை நிறைவேற்றுவதை எளிதாக்குகிறது. மறுபுறத்தில் ஏனைய ப.பொ.உ.க. நாடுகளில் 1976—1980க்கென ஏற்படுத்தப்பட்ட அடிப்படை சமூக மற்றும் பொருளாதார இலக்குகளை எய்துவது பத்தாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் சோவியத் யூனியனின் நடவடிக்கைகளிலேயே பெருமளவு தங்கியுள்ளது.

சமீப எதிர்காலத்தில் ப.பொ.உ.க. நாடுகளுக்கு எரிபொருள், சக்தி மற்றும் மூலப்பொருட்களில் முக்கியமான வகைகளை வழங்குவதற்கான பிரதான பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு தேசியத் திட்டங்களின் சமநிலையே உதவின. 1976க்கும் 1980க்குமிடையில் சோவியத் யூனியன் இந் நாடுகளுக்குச் சுமார் 78 கோடி தொன் (இப்போதுள்ள) எரிபொருட்களை அல்லது முந்திய ஐந்தாண்டுகளைவிட 50 சதவீதத்திற்குமதிகமானதை வழங்கும். சகோதர நாடுகளும் சோவியத் யூனியனிடமிருந்து 11 கோடி 40 லட்சம் தொன் இரும்பு செறிந்த உலோகங்களையும், சுமார் 2 கோடி 70 லட்சம் உருட்டப்பட்ட இரும்பு உலோகத்தையும், 20 லட்சம் தொன்களுக்குமதிகமான பருத்தி நாரையும் பெறும். இந்த பெருமளவிலான, உத்தரவாதமான விநியோக அளவு மூலப்பொருள் மற்றும் சக்தி நெருக்கடிக்குள் தத்தளிக்கும் உலக முதலாளித்துவ பொருளாதாரத்தை வேறுபடுத்திக் காட்டுவதாயமைந்துள்ளது.

இப்போது எரிபொருள் மற்றும் மூலப்பொருட்களுற்பத்தியிலான ப.பொ.உ.க. நாடுகளுக்கிடைப்பட்ட உழைப்புப் பிரிவினையானது நீண்டகால ஒத்துழைப்புத் திட்டங்களின்றியும் வளங்களையும், நிதிகளையும் திரட்டுவதின்றியும் எதிர்கால முன்னேற்றமில்லை என்ற கட்டத்தை எய்தியுள்ளது. 1976—1980க்கான ஒருமைப்பாட்டு நடவடிக்கை

களுக்கான சம்நிலேத்திட்டம் பிரமாண்டமான தொழிற் பேட்டைகளுக்கான சுமார் 900 கோடி ரூபிள்களை ஒதுக்கி யுள்ளது. செலவினத்தில் பாதியும் சோவியத் யூனியனால் எதிர்கொள்ளப்படும் இத்திட்டங்களெல்லாம் உற்பத்தி யைத் தொடங்கும்போது ப.பொ.உ.க. நாடுகள் தமது முதலீட்டுப் பங்குகளுக்கான மீளளிப்பாக ஆண்டுதோறும் 1550 கோடி கன மீட்டர் இயற்கை வாயுவையும், 90 லட் சத்திற்குமதிகமான இரும்புசெறிந்த மூலப்பொருட்களே யும், சுமார் 200000 தொன் இரும்புக் கலப்புகளேயும், 200000 தொன் செலுலோசையும், 180000 தொன் அஸ்பெஸ்டசையும் பெறும்.

வர்த்தகக் கட்டமைப்பும்கூட மாறுகிறது. நாமறிந்த படி அனேத்துக்கூறு உழைப்புப் பிரிவினேக்கான திட்டமான அளவுகள் அல்லது பூரணமாக்கப்பட்ட பொருட்களுக்கான எரிபொருள் மற்றும் மூலப்பொருள் பரிவர்த்தனே என்பன இருக்கின்றன. பல இயற்கை வளங்களின் அகழ்வு, ஏற்று மதியிலான இன்றைய மட்டத்தோடு அவற்றின் கட்டுப் பாடும் புதிதாக்கப்படாததும் மேலும் மேலும் சிக்கலாகி வருகிறது. அதே வேளேயில் தயாரிப்புத் துறையிலான சர்வதேச உற்பத்தி நிபுணத்துவம். ஒத்துழைப்பு என்ப வற்றிற்கு அளவேயில்லே. சோவியத் யூனியனுக்கும் ஏனைய ப.பொ.உ.க நாடுகளுக்குமிடையிலான ஒரு முக்கிய தொழில்நுட்ப வளர்ச்சி ஊக்கியும், வர்த்தக விரிவாக்க நெம்புகோலும் இதுவேயாகும்.

தற்போதைய ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந் நாடுகளுக்கான சோவியத் யூனியனின் இயந்திர மற்றும் சாதனங்களின் விநியோகம் 1.8 தடவைகளால் அதிகரிக்கும். அந்நாடுகள் சக்தித்தொழில், உலோகவியல், விவசாயம் போன்ற பல துறைகளே விரிவாக்கவும் நவீனப்படுத்தவும் இது ஏதுவாகிறது. உதாரணமாக நிறுவப்பட்டுள்ள நீர் மின்சக்தி மற்றும் அணுச்சக்தி நிலேயங்களின் ஆற்றல் 176 லட்சம் கிலோவாட்களாகும். சகோதர நாடுகள் பத்தாயி ரக்கணக்கான சோவியத் டிராக்டர்கள், டிரக்குகள், கார் கள், பல்வித உற்பத்திஇயந்திரங்கள் என்பவற்றைப் பெறும்.

ப.பொ.உ.க.வின் நடவடிக்கைகளும் அதன் அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான உறவுகளும் சோஷலிஸ சர்வதேசி யத்திற்கானதோர் உதாரணமே. சோ.க.க.வின் 25வது காங்கிரஸில் சோ.க.க. மத்திய கமிட்டி பொதுச்செயலா ளர் எல்.ஐ.பிரெஷ்னேவ் ஒருபுதுரகபொருளாதாரப்பிணேப் புகளின் நன்மைகளேப்பற்றிக் குறிப்பிடும்போது இவ்வாறு கூறினர்: ''இது, போதியளவு பரஸ்பர பொருளாதார நன்மைகள் மட்டுமல்ல, மாபெரும் மகத்தான அரசியல் முக்கி யத்துவம்மிக்கதாகும். இது எமது சமாஜத்தின் பொரு ளாயத அடித்தளத்தை வலுப்படுத்துவதுமாகும்''.

— பிராவ்தா, மார்ச் 12, 1977.

# சமாதானத்திற்கும் இணக்க அமைதிக்குமான போராட்டம்

* ஆயுதப் பரிகரணத்தின் முன்னணியில்
* நியூட்டன் குண்டு-சமாதானத்திற்குச் சவால்

# ஆயுதப் பரிகரணத்தின் முன்னணியில்

ஆயுதப் பரிகரண நடவடிக்கைகளுக்குத் தடையாயிருப்பதெது? சம்பந்தப்பட்ட தரப்புகளின் நிலைபாடுகளை ஒப்பிடுவதன் மூலமும் ஆயுதக் குறைப்பு பற்றிய அரசாங்கங்களின் அறிக்கைகளை ஒப்பிடுவதன் மூலமும் இதற்குரிய விடையை யளிக்கலாம்.

**1978** மே—ஜூன் மாதங்களில் ஆயுதப் பரிகரணம் பற்றிய பிரச்னைகள் சம்பந்தமானதோர் விசேட கூட்டத் தொடரை நடத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையில் முனைப்பான தயாரிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1977 இறுதிப் பகுதியில் நடந்த ஐ.நா. பொதுச்சபையின் 32வது கூட்டத் தொடரில் இப் பிரச்னைகளுக்கு அதிக முக்கியத்துவமளிக்கப்பட்டது.

யாதார்த்த பூர்வ அணுகுமுறையை அடியொற்றிய எல்லா ஆக்கபூர்வமான பிரேரணைகளும் போராயுதங்களைக் கட்டுப்படுத்தல், ஆயுதப் பரிகாரணம் சம்பந்தமான பிரச்னைகளுக்குத் தம் பங்களிப்பைச் செய்வதாகவே அமைகின்றன. ஆதேவேளையில் இப்போது நடைபெறும் இப்பிரச்னை குறித்த பரவலான, அர்த்தமுள்ள பேச்சுவார்தைகள் நல்ல தீர்வைக் காணலாம் என்ற போக்கை வெளிப்படுத்துவதாயிருக்கின்றன. பொறுப்பான பதவிகளிலுள்ளவர்களுட்பட சில மேற்கத்திய அரசியல்வாதிகள், அரசியல் சதுரங்கத்தின் ஓரங்கமாகவே ஆயுதப் பரிகரண சுலோகத்தையும் பிணக்குகளுக்கானதாகப் பாவிக்கிறார்கள்.



## முடிவமைதியின் நலன்களில்

மனித சங்காரத்திற்காக அணுச் சக்தி கொண்ட ஆயுதங்களை உற்பத்தி செய்வதையும் பாவிப்பதையும் தடைசெய்யவேண்டுமென ஒருநகல் கோரிக்கையை (1946 ஜூனில்) முதற்தடவையாக முன்வைத்தது சோவியத் யூனியனே. அன்றுமுதலே தேசங்களின் ஆயுதசாலைகளிலிருந்து நாசகார ஆயுதங்களை அகற்றுவதற்காகவும் அணுவாயுதங்களைப் பாவிப்பதைத் தடைசெய்வதன் மூலமும் இந்நோக்கம் முன்னெடுத்துச் செல்லப்பட்டது 1972ல், சோவியத் யூனியனின் முன்முயற்சியினால் சர்வதேச உறவுகளில் பலப்பிரயோகத்தைத் தவிர்ப்பதையும், அணுவாயுதங்களை நிரந்தரமாகப் பாவிக்காதிருப்பதையும் நோக்கயாகக் கொண்ட ஒரு தீர்மானத்தை ஐ நா. சபை நிறைவேற்றிற்று. 1976ல், அணுவாயுதங்களுட்பட எல்லாவித ஆயுதங்களையும் தடைசெய்ய வல்ல சாவதேச உறவுகளில் பலப் பிரயோகம் செய்யாதிருப்பது மீதான ஒரு உலக ஒப்பந்தத்தைச் செய்ய சோவியத் யூனியன் பிரேரணை கொண்டுவந்தது. கடைசியில். ஏனைய சோஷலிஸ நாடுகளுடனிணைந்து ஐரோப்பாவில் பந்தோபஸ்தும் ஒத்துழைப்பும் பற்றிய மாநாட்டின் இறுதித் தஸ்தாவேஜில் கைச்சாத்திட அனைவரும் ஒருவருக்கெதிராக மற்றவர் அணுவாயுதங்களை பிரயோகிப்பதை தவிர்க்க வேண்டும் என்ற பிரேரணையை 1976ல முன்வைத்தது. இப்பிரச்னைகள் சம்பந்தமான பொருத்தமான நகல் ஒப்பநதங்கள் தயாரிக்கப்பட்டன.

சமீப ஆண்டுகளில் சோவியத் யூனியன் தனது இராணுவ செலவுகளைக் குறைத்துள்ளது. எனவே 1977 அரச பட்ஜெட் விதிக்கேற்ப பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான செலவு 1,720 கோடி ரூபிள்கள் அல்லது மொத்த செலவினத்தில் 7.2 சதவீதமேயாகும். இது 1976ல் 1740 கோடி ரூபிள்கள் அல்லது 7.8 சத வீதமும்; 1974ல் 1760 கோடி ரூபிள்கள் அல்லது 9.1 சதவீதமுமாகும்.

ஆனால் மேற்குலகிலோ நிலைமை வேறாகவுள்ளது. அமெரிக்கா 1978ல் இராணுவ நடவடிக்கைகளுக்காக சுமார் 11,000 கோடி டாலர்களை செலவிடவிருக்கிறது. ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு பண்டஸ்வரை நவீன ஆயுதங்களால் ஆயுதபாணியாக்குவதற்குமட்டும் இராணுவ செலவினத்தை 80 சதவீதத்தால் 1971ல் அதிகரித்தது. பிரித்தானியாவில் 1976-1977 ஆண்டிற்கான இராணுவ பட்ஜெட் மட்டும் 100 கோடி பவுண்களால் அதிகரிக்கப்பட்டது ஏனைய நேட்டோ நாடுகளிலும் இராணுவ பட்ஜட் பெருமளவு அதிகரித்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் சோவியத் யூனியனோ அல்லது வார்ஸோ ஒப்பந்த அங்கத்துவ நாடுகளோ தமது இராணுவ பலத்தை அதிகரிக்கவில்லை.

சோவியத் யூனியன் உருவான இந்த அறுபதாண்டுகளில் போராயுதங்களுக்கு முடிவேற்படுத்துவதிலும் ஆயுதப் பரிகரணத்தை மேற்கொள்வதிலுமான போராட்டத்தின் முன்னணியில் அது எப்போதுமே இருந்துள்ளது. சோ. க. க. 25வது காங்கிரஸில் எல். ஐ. பிரெஷ்னேவ் இவ்வாறு கூறினார்: ''போராயுதங்கள் தொடர்ந்தும் இருப்பதினால் ஏற்படப்போகும் ஆபத்திலிருந்து மக்களை விடுவிக்கின்ற போராளிகளின் முன் வரிசையிலிருக்கும் கஷ்டமான மகத்தான பணியையிட்டு சோவியத் கம்யூனிஸ்டுகள் பெருமிதமடைகிறார்கள்.''

## சோவியத் பிரேரணைகளின் தனித்துவம் என்ன?

ஆயுதப் பரிகரணம் சம்பந்தமான சோவியத் பிரேரணைகளை உண்மையில் தனித்துவப்படுத்துவதெது?

பேச்சுவார்த்தைகளிலும், ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திட்ட அனைவர்க்கும் சம பாதுகாப்பு என்ற கோட்பாட்டைக் கண்டிப்பாகக் கடைபிடிப்பதிலேயே அவை தங்கியுள்ளன. பேச்சுவார்த்தைகளிலும், ஒப்பந்தங்களிலும பங்குபற்றிய எந்தவொரு நாடும் ஆயுதக் கட்டுப்பாட்டின், ஆயுதப் பரிகரணத்தின் பலனாக எவ்வித இராணுவ அனுகூலத்தையும் பெறுவதை சோவயத் யூனியன் வன்மையாக எதிர்க்கிறது. ஆயுதப் பரிகரணப் பிரச்னை உலக வியாபகமானதும், அனைத்து நாடுகளும் மக்களும் அதன் தீர்வுக்கு அக்கறை காட்டுகிறார்கள் என்ற கருத்தினடிப்படையிலேயே சோவியத் ஆயுதப் பரிகரணப் பிரேரணைகளமைந்துள்ளன. எனவே ஆயுதங்களுக்கு முடிவேற்படுத்துவதிலான வழிவகைகள் அனைத்து நாடுகளும் ஆர்வத்தோடு பங்குபற்றுவதன் மூலமே வெளிப்படமுடியும். ஆயுதப் பரிகரணப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண ஒவ்வொரு நாடும் தன் பங்களிப்பைச் செய்ய வேண்டியதை உறுதிசெய்ய வேண்டுமென விரும்பும் சோவியத் யூனியன் ஒரு உலக ஆயுதப் பரிகரண மாநாட்டிற்காக எல்லா உலக நாடுகளும் பங்குபற்றுவதற்கானதோர் பிரேரணையை முன்வைத்துள்ளது. ஆயுதப் பரிகரணம் சம்பந்தமாக ஒரு விசேட ஐ.நா. கூட்டத் தொடரை நடத்துவதற்கான தயாரிப்புகளிலும் அது ஆர்வமிக்க பங்கை வகிக்கிறது.



ஆயுதப் பரிகரணத்திற்கான சோவியத் யூனியனின் முனைப்பானதும், ஸ்திரமானதுமான போராட்டம் சோவியத் சோஷலிஸ அமைப்பின் இயல்பிலேயே வேரோடியதாகும். சோவியத் யூனியன் வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படையே சோ. சோ. கு. ஒன்றிய புதிய அரசியல் யாப்பில் இடம் பெற்றுள்ளது. சோவியத் யூனியனில் யுத்தப் பிரசாரம் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது

பொதுவானதும் முழுமையானதுமான ஆயுதப் பரிகரணம் என்ற ஈற்று இலக்கை எய்த எத்தனிக்கும் சோவியத் யூனியன் ஆயுதக் கட்டுப்பாட்டிற்கும் ஆயுதப் பரிகரணத்தை எய்துவதற்குமான தனிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொளவதற்கான உறுதியான பிரேரணைகளை முன்னெடுத்து வருகிறது. இவ்வாறான பல பிரேரணைகள் அடிப்படை சர்வதேச ஆயுதப் பரிகரண ஒப்பந்தங்களிலும் சேர்க்கப்பட்டுள்ளன. உதாரணமாக, இராணுவ அல்லது சுற்றாடலை மாற்றும் நுணுக்கமான நடவடிக்கைகளைத் தடுக்கின்ற ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டதானது 1974ல் நடந்த பொதுச் சபையின் 29வது அமர்வில் ஏற்றுக்கொள்வதற்காக சோவியத் யூனியனால் முன்வைக்கப்பட்ட பிரேரணையாலும் நகல் ஒப்பந்தத்தாலுமே நிறைவேற்றப்பட்டது.

எண்ணற்ற சோவியத் பிரேரணைகளின் மீதான பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. தாக்கம் மிக்க பல ஆயுதப் பரிகரண பிரச்னைகளுக்கு தீர்வு காணப்பட்டால் அவற்றை ஆக்கபூர்வமான, பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளத் தக்க அடிப்படையில் தீர்க்க பொய்யானசாக்குப் போக்குகளால் மறுதலித்துவந்த தேசங்களின்மீதே எல்லாவற்றிற்கும் மேலாகப்பொறுப்பு தங்கியுள்ளது. ஆயுதக்குவிப்பிலும், சர்வதேசபதட்ட நிலையைக் கிளர்த்துவதிலும் அக்கறை கொண்டுள்ள இராணுவவாத வட்டாரங்கள் ஒப்பந்தங்கள் ஏற்படுவதற்குத் தடையாயிருக்கின்றன. குற்றத்தை வேறு இடத்தில் சுமத்தும் அவை சோவியத் யூனியனின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குத் தவறான அர்த்தம் கற்பிக்க முனைவதோடு மோசமான சோவியத் விரோத பிரசாரத்திலும் ஈடுபடுகின்றன.

இவ்வாறான குரூர அவதூறுகளிலிருந்து உண்மை விடுவிக்கப்பட்டுள்ளது. தனது பாதுகாப்பை சீரமைக்க சோவியத் யூனியனுக்கு வேண்டியுள்ளது. காரணம் ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் கட்டுப்பாடற்ற ஆயுதங்களால் - விசேடமாக நேட்டோ நாடுகளில் சோவியத் யூனியனை எதிர்த்து நிற்கின்றது.

★

எனினும் கடந்த 10—15 ஆண்டுகளில் ஆயுதக் குறைப்பு, பரிகரணம் சம்பந்தமாக சுமார் இருபது ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன என்ற உண்மை மறுதலிக்க முடியாததே. இந்த எல்லா ஒப்பந்தங்களிலும் சோவியத் யூனியனானது அவற்றை முன்வைத்ததாக அல்லது அவற்றைத் தயாரிப்பதில் ஆர்வத்தோடு பங்குபற்றிய தேசமாகவே திகழ்கிறது.

எவ்ஜெனி பயதொரோவ்

# நியூட்ரன் குண்டு-சமாதானத்திற்குச் சவால்

உலக சமாதானக் கவுன்ஸிலின் உதவித் தலைவரும், சோவியத் சமாதானக் கட்டி துணைத்தலைவருமான பேரவையாளர் எவ்ஜெனி பயதொரோவ் எமது நிருபருக்களித்த பேட்டியை இங்கு வெளியிடுகிறோம்.

லட்சக்கணக்கான மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் உலக சமாதானக் கவுன்ஸிலானது பேரழிவை ஏற்படுத்தவல்ல புதியவகை ஆயுதங்களை—நியூட்ரன் அணுவாயுதங்களையும், கப்பல் ஏவுகணைகளையும்—உருவாக்கவும், விஸ்தரிக்கவுமான பாதையை அமெரிக்கா மேற்கொள்கிறது என்ற தகவல் குறித்து கடுமையாக எதிரொலிக்கிறது.

அமெரிக்காவின் இந் நடவடிக்கைகள் முழு உலகிற்குமே ஒரு சவாலாகும். வாஷிங்டன் ஆயுதப்போட்டியை கட்டுப்படுத்துவதற்கு மாறாக அதை முடுக்கிவிடுவதை இவை காட்டுகின்றன. நியூட்ரன் குண்டை ''தூய'' ஆயுதம் எனக் கூறிய பென்டாகனின் கூற்று மக்களை ஏமாற்றும் அபத்தமாகும். யுத்தகளத்தில்போருபாயஆயுதமாகவே நேரடியாக நியூட்ரன் ஆயுதங்கள் பாவிக்கப்படும் என்பதும் இவர்களின் வாதமாகும். அவற்றைப் பாவித்தாலும் அது பெரியதோர் அணுப்போருக்கு இட்டுச்செல்லாது என அர்த்தப்படுத்தவே இவர்கள் முயற்சிக்கிறார்கள். இவ்வித தர்க்கங்களின் தவறுகளும், அபாயங்களும் வெளிப்படையானவையே. அணுவாயுத போரபாய விளிம்

புக்கே உலகை இட்டுச்செல்லக்கூடிய நடைமுறை நடவடிக்கைகளை நியாயப்படுத்தவும், ஆதரிக்கவுமான முயற்சிகளை மறைகக அவர்கள் எத்தனிக்கிறார்கள். அமெரிக்க அரசாங்கத்தின் இவ்வாறான நடவடிக்கைகள் சமாதானம், ஆயுதக்குறைப்புப் பாதுகாப்பிற்கான அதன் வாய்ச் சவடால் பிரகடனங்களுக்கு எதிராகவே அப்பட்டமாக அமைந்துள்ளன. ஐக்கிய அமெரிக்காவால் பிரகடனப்படுத்தப்பட்ட அணுவாயுத பரவல் தடையைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கும் போக்கிற்கு எதிராகவும் இவை இருக்கின்றன. ஆயுதக் கட்டுப்பாடு பற்றிய தற்போதைய பேச்சுவார்த்தைகளுக்கு இப் போக்குகள் ஏற்படுத்தக்கூடிய எதிர்விளைவுகளைப்பற்றி ஐக்கிய அமெரிக்காவிலேயே பாரதூரமான கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

போராயுதங்களுக்கு விசேடமாக அணுவாயுதங்களுக்கு முடிவேற்படுத்த முனைப்பான போராட்டத்தை மேற்கொள்ளும்படி ஐரோப்பா, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளின் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

நேட்டோவின் திட்டங்களுக்கேற்ப அமெரிக்க நியூட்ரன் ஆயுதங்கள் பரவக்கூடிய அபாயமுள்ள மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அமெரிக்காவின் நடவடிக்கைகளையிட்டு பெருங்கவலை ஏற்பட்டுள்ளது. அவ்வாறான நோக்கங்களெல்லாம் ஐரோப்பாக் கண்டத்தில் சமாதானத்தையும், பந்தோபஸ்தையும் பலப்படுத்தும் கடமைக்கு விரோதமாகவே இருக்கின்றன. ஐரோப்பாவின் எதிர்காலத்தைக் கெடுதிமிக்கதோர் ஆபத்து எதிர்நோக்குவதை அவர்கள் உணர்கிறார்கள். எனவே எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் நியூட்ரன் குண்டுக்கெதிராக விரிவான இயக்கம் உருவாகிவருகிறது. அதனால் நியூட்ரன் ஆயுத உற்பத்தி, பரவலாக்கம் என்பதற்கான அமெரிக்க அதிகார வர்க்கத்தின் தீர்மானத்தைக் கண்டிக்கும் உலக சமாதான கவுன்ஸிலின் அறிக்கை பொதுமக்களின் பெரும் ஆதரவைப் பெற்றுள்ளது.

உலகனைத்திலுமுள்ள லட்சோப லட்சம் மக்கள் இப் புதிய குண்டிற்கெதிரான போராட்டத்தில் அக்கறையோடு ஈடுபடுகிறார்கள்.

சோவியத் சமாதானக் கமிட்டி விடுத்த அறிக்கையொன்று அமெரிக்க இராணுவத்தின் திட்டங்களைக் கண்டிப்பதோடு உலக சமாதான கவுன்ஸிலின் முன்முயற்சிகளையும் ஆதரிக்கிறது.

சோஷலிஸ சமாஜ நாடுகளில் நியூட்ரன் குண்டிற்கெதிராக நடத்தப்படும் பரந்த இயக்கத்தை ஆதரித்து எண்



ணற்ற செய்திகளும், அறிக்கைகளும் வந்தபடியேயிருக்கின்றன.

போலந்து, ரூமேனியா, ஜெ.ஜ.கு, செக்கோஸ்லவாக்கியா, பல்கேரியா, ஹங்கேரி ஆகிய நாடுகளின் தொழிலாள மக்கள் இப் புதிய நாசகார குண்டு ''வேண்டாம்'' என மிக அழுத்தமாகக் கூறிவிட்டனர். போராயுதங்களின் விஸ்தரிப்பக் கொள்கைக்கெதிராக மேற்கு ஐரோப்பாவில் பொது ஊர்வலங்களும், கண்டன ஆர்ப்பாட்டங்களும், கூட்டங்களும் நடத்தப்படுகின்றன. சமாதானத்திற்காக அமெரிக்கா, ஜப்பான் இன்னும் பல நாடுகளின் மக்கள் குரலெழுப்புகிறார்கள்.

சோவியத் மக்கள் நிரந்தர சமாதானத்தையே விழைகின்றார்கள். எனவே அவர்கள் போராயுதங்களை உறுதியோடு எதிர்ப்பதோடு, சோ.க.க வினதும் சோவியத் அரசாங்கத்தினதும் லெனினிய அயல்நாட்டுக் கொள்கையை முழுமனதோடு ஆதரிப்பதோடு ஏற்றுக்கொண்டுமிருக்கிறார்கள்.

இக்கொடிய ஜனசங்கார ஆயுதத்தைத் தடுக்குமுகமாக உடனடி நடவடிக்கைகளெடுக்கும்படியும், மனிதனின் மகத்தான உரிமையாம் வாழும் உரிமையைப் பேணிப் பாதுகாப்பதன் பொருட்டு உறுதியோடு முன்வரும்படியும் அனைத்து மக்களுக்கும் சோவியத் மக்கள் அழைப்பு விடுக்கிறார்கள்.

# சோ.சோ.கு. ஒன்றியமும் வளர்முக நாடுகளும்

★ சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்காக

# சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்காக

தாம் முகங்கொடுத்துவரும் சமூக, பொருளாதாரக் கடமைகளுக்குத்தீர்வு காணப் பங்களிக்கின்ற ஆசிய, ஆபிரிக்க, லத்தீனமெரிக்க நாடுகளுடன் விரிவான, பரஸ்பரம் அனுகூலமிக்க ஒத்துழைப்புக்காக சோவியத் யூனியன் முரணின்றியும் இடையறுதும் போராடி வருகின்றது.

மூன்றும் உலகின் பல நாடுகளைச் சேர்ந்த ராஜ்யவாதிகளும் பொதுவாழ்வுப் பிரமுகர்களும் இத்தகைய ஒத்துழைப்புக்கு ஆதரவளிக்கின்றனர். விமோசனமுற்ற நாடுகள் சோவியத் யூனியனை நம்பகமான பங்காளியாகக் காண்கின்றன. சோவியத் யூனியன் தன்க்கென எந்தவிதமான பயன்களையும் அநுகூலங்களையும் விழைவதில்லை. ஆனல், அது தனது உறவுகளை சமத்துவம், அந் நாடுகளின் இறைமையின்மீது மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில் கட்டி எழுப்புகின்றது, காலனித்துவத்திடமிருந்து பெற்ற கொடிய பிதுரார்ஜிதத்தைக் கடக்கவும், ஏகாதிபத்திய வல்லரசுகளின் நிர்ப்பந்தத்தையும் சுரண்டலையும் ஒழிக்கவுமாக அவற்றிற்கான கஷ்டங்களையும் அனுதாபத்துடன் நோக்குகின்றது.

## வரலாறுபூர்வமான நினைவுகள்

சோவியத் ரஷ்யா தனது ஜீவிய காலத்தின் தொடக்கத்தின்போதே காலனிகளிலும், சார்பு நாடுகளிமுலுள்ள மக்களின் நியாயமான போராட்டத்திற்கு ஆதரவாக இருந்துவந்தது. கிழக்குலகிலும், உலகம் முழுவதிலுமுள்ள

மக்களுடனான தனது உறவுகளை சுதந்தரம், சமத்துவம், நட்புறவு பரஸ்பர உதவி ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் கட்டி எழுப்பும் என அது பிரகடனஞ் செய்தது, ஏனைய நாடுகளுடன் ஸாரிஸ அரசாங்கம் செய்து கொண்டிருந்த சமதையற்ற உடன்படிக்கைகளையும் ஒப்பந்தங்களையும் சோவியத் குடியரசு ரத்துச்செய்தது. அவ்வாறு, ஆப்கானிஸ்தான், ஈரான், சீனா ஆகிய நாடுகளின் செல்வாக்குத் துறைகளைப் பிரிப்பது குறித்து பிரிட்டனுடன் ரஷ்யா செய்துகொண்டிருந்த ஒப்பந்தத் தளைகளை அது ரத்துச்செய்தது. ரஷ்ய எதேச்சாதிகாரத்திற்குச் சொத்தமாகவிருந்த எல்லாச் சலுகைகளையும், நிலங்களையும், சொத்துக்களையும் ஈரான், ஆப்பானிஸ்தான், மங்கோலியா, துருக்கி ஆகியவற்றின் மக்களுக்கு அது மாற்றியது.

சோவியத் ருஷ்யா அவற்றிற்குப் பொருளாயத உதவிகளையும் வழங்கிற்று. அவ்வாறு. 1920ம் ஆண்டுகளின் போதும் 1930ம் ஆண்டுகளின்போதும் விவசாயத்தை உயர்த்துவதற்காக ஆப்கானிஸ்தானுக்கும், மத்திய கிழக்கின் அருகாமையில் மிகப்பெரிய புடவை ஆலையை நிறுவுவதற்காக துருக்கிக்கும் நீண்டகாலக் கடன்களை சோவியத் யூனியன் வழங்கிற்று. அரபு மக்களுடனும், ஆபிரிக்க மக்களுடனும், ஏனைய மக்களுடனும் பரஸ்பரம் அநுகூலமிக்க பொருளாதார, வர்த்தக உறவுகளை ஸ்தாபிக்க அது விழைந்தது. ஆனால் யுத்தத்திற்கு முன்னர், ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் உள்ள பெரும்பாலான நாடுகள் காலனிகளாகவும் அரைக் காலனிகளாகவும் இருந்ததால் இந்த தொடர்புகளையும் உறவுகளையும் விரிவான அளவில் அபிவிருத்தி செய்யமுடியவில்லை.

இரண்டாம் உலகப் போரின் (1939—1945) பின்னர் உலக சோஷலிஸ அமைப்பின் ஸ்தாபிதம், காலனித்துவத்தின் சிதைவு ஆகியவற்றின் காரணமாக நிலைமை தீவிரமாக மாறியது. முன்னைய காலனிகளும், அரைக் காலனிகளும் அரசியல் சுதந்திரத்தை வென்றெடுத்ததுடன், யாருடன், எந்த அடிப்படையில் பொருளாதார, வர்த்தக உறவுகளை வளர்க்க முடியும் என்பதை தாமாகவே தீர்மானித்துக்கொள்ளமுடியும். இவ்வாறு, வளர்முக நாடுகளுடனான பொருளாதார தொடர்புகள் துறையில் மேற்குலகின் ஏகபோகம் குலைக்கப்பட்டது. இன்று, பொருளாதாரம், வர்த்தகம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவற்றின் பல்வேறு துறைகளில் வளர்முக நாடுகளும், சோஷலிஸ நாடுகளும். பயனுள்ள முறையில் ஒத்துழைத்து வருகின்றன. சமதைமிக்க இருவகை நாடுகளுக்குமிடையிலான ஒத்துழைப்பானது, புதிய சர்வதேச உழைப்புப் பிரிவை ஏற்படுத்தும் அளவுக்கு அத்தகைய உயர்ந்த விதத்தில் விரிவடைந்துள்ளது. இது எமது காலத்தின் அறிகுறியாகும். சோஷலிஸ நாடுகளும், வளர்முக நாடுகளும் தமது பொருளாதார மட்டத்தின் வித்தியாசமின்றி



ஒவ்வொன்றும் தாம் சமூகப் பொருளாதாரத் துறைகளில் முகங்கொடுத்து வரும் கடமைகளை மேலும் வெற்றிகரமாக இப்போது சமாளிக்கமுடியும்.

## வர்த்தகம் - முன்னேற்றத்தின் முக்கியக் காரணி

சோவியத் யூனியனுக்கும், விமோசனமுற்ற நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகப் பொருளாதார உறவுகளும் ஏனைய, தொடர்புகளும், விசாலமானவையாகும், இருதரப்பு அடிப்படையில் சார்ந்திருப்பவையாகும். இந்தத் தொடர்புகளும், உறவுகளும் பிற்காலத்தில் துரிதமாக வியாபித்துள்ளன. பல்வேறு சர்வதேச ஸ்தாபனங்கள் குறிப்பிடுவதைப்போல் சோஷலிஸ நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் அதிகரிக்கின்றது, உலகச் சந்தை வளர்ச்சியின் மிகவும் இயக்கவலுமிக்க காரணிகளில் ஒன்றாக மாறியுள்ளது. 1960 -1974ம் ஆண்டுகளின்போது, மூன்றாம் உலக நாடுகளுடனான தனது வர்த்தக அளவை சோவியத் யூனியன் ஏழு மடங்காக அதிகரித்தது. 1976ம் ஆண்டில் இந்நாடுகளுடனான சோவியத் யூனியனின் வர்த்தகம் 650 கோடி ரூபிள்களாகும்.

வளர்முக நாடுகளுடன் சோவியத் யூனியன் கொண்டுள்ள வர்த்தகமானது மிகவும் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றுத் திகழ்கின்றது. அதாவது, சமத்துவமும், பரஸ்பர பயனும், அனுகூலமுமே இவற்றின் அடிப்படையாகும். முதலாளித்துவ நாடுகளால் பிரகடனஞ் செய்யப்பட்டுள்ள ''சமத்துவ வாய்ப்புகள்'', ''தேசிய ஆளுகை'' ஆகிய கோட்பாடுகள் நடைமுறையில் மேற்குலகிற்கு அல்லாமல் வேறு யாருக்குப் பயனளிப்பவை அல்ல.

மூன்றாம் உலக நாடுகளின் பொருளாதாரங்கள் மேற்கத்தைய நாடுகளின் பொருளாதாரங்களுடன் போட்டியிடும் அளவுக்கு இல்லாத காரணத்தால் ''சமமான வாய்ப்புகள்'' என்ற பிரச்னைக்கு இடமேயில்லை. காலங்காலமாக இருந்துவரும் தமது பின்தங்கிய நிலைமையைக் கடக்கவும், சமூகப் பொருளாதார முன்னேற்றத்தை உறுதி செய்யவும் தொழிற்துறைபொருட்களை உற்பத்திசெய்ய வளர்முக நாடுகள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. இந்நாடுகளின் பொருளாதாரத்தில் சிக்கவைப்பதற்காகவும் தமது ஆதிக்கத்தை மீண்டும் ஏற்படுத்தவும் மேற்கு நாடுகள் இவற்றைச் சுரண்டுகின்றன. எனவே, சமதையின்மையையும், பின்தங்கிய நிலைமையையும் முடிவுக்குக் கொண்டுவருவதற்கான போராட்டத்தில் முக்கியமான ஆயுதமாகக் காணப்படுவது சார்பினைத் ஒழித்துக் கட்டுவதாகும் என்பது தற்செயலானதல்ல. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க

நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பெரும்பாலான பண்டங்களுக்கு ஏற்றுமதிக் கட்டுப்பாட்டினை முதலாளித்துவ நாடுகள் விதிக்கின்றன. இவை அந்நாடுகளின் முன்னேற்றத்திற்குப் பெருந் தடையை விதிக்கின்றன.

மறுபுறத்தில் பார்க்கின்றபோது, சோவியத் யூனியனும் இதர சோஷலிஸ நாடுகளும் 1965ம் ஆண்டில ஆபிரிக்க, ஆசிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பொருட்களின் மீதான சுங்க வரியை மறுபரிசீலனை செய்து மாற்றியமைத்துள்ளன. இதன்மூலம் பரஸ்பர வர்க்கத்திற்கு புதிய உந்துசக்தியை அளித்துள்ளன.

வளர்முக நாடுகளுக்கான ஏற்றுமதிகளில், அவற்றின் தேசிய பொருளாதாரங்களின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான தொழிற்துறைச் சாதனங்களே பிரதான இடத்தை வகிக்கின்றன. சோவியத் ஏற்றுமதிகளில் மூன்றில் ஒரு பங்குக்கு அதிகமானவை இயந்திரங்களும் சாதனங்களுமேயாகும். தனது கொள்வனவுக்கு எளிதான முறையை உருவாக்கும்பொருட்டு, விசேடமாக பூரண ஆலையையும் விநியோகஞ்செய்யும் பொருட்டு சோவியத் யூனியன் மிகவும் சாதகமான வர்த்தகக் கடன்களை வழங்குகின்றது.

இதற்கு மாறாக, வளர்முக நாடுகளிலிருந்து அவற்றின் ஸ்திரமான உற்பத்திப் பொருட்களையும், சோவியத் உதவியுடன் கட்டப்பட்ட தொழிலகங்களின் தொழிற்துறை உற்பத்திப் பொருட்களையும் சோவியத் யூனியன் இறக்குமதி செய்கின்றது. அடிக்கடி இவை சோவியத் யூனியனிடமிருந்து பெற்ற கடன்களைத் திருப்பிக் கொடுக்கும முகமாகவே மேற்கொள்ளப்படுகின்றன. செய்திஸ்கிர் அலுமினியம் ஆலையை நிர்மாணிப்பதற்கு சோ.சோ.கு. ஒன்றியம் வழங்கிய கடன்களைத் திருப்பிக்கொடுக்குமுகமாக துருக்கி அலுமினியத்தை விநியோகஞ் செய்கின்றது.

## பொருளாதார ஒத்துழைப்பு

ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுடனான சோவியத் யூனியனின் பொருளாதாரத் தொடர்புகள் வர்த்தகத் தொடர்புகளோடு மாத்திரம் வரையறை கொண்டிருக்கவில்லை.

இன்று இந்நாடுகள் பல்வேறு பொருளாதாரத் துறைகளில் விரிவாக ஒத்துழைத்துவருகின்றன. இந்த ஒத்துழைப்பு திட்டமிட்ட அடிப்படையில் செயல்படுத்தப்பட்டுள்ளன. இளம் சுதந்திர நாடுகளின் தேசிய வேலைத்திட்டங்களுடன் இசைவானவையாக உள்ளன. வளர்முக நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள பொருளாதார தொழில்நுட்ப



உதவிகளில் முதலிடம் பொதுத்துறைக்குரியதாகும். இவையே மூன்றும் உலக நாடுகளில் மேலும் முற்போக்கான மாற்றங்களைச் செயல்படுத்துவதற்கான பொருளாதார அடித்தளமாக உள்ளன. இந்தத் துறையின் வியாபிதமானது விமோசனமுற்ற நாடுகளின் நலன்களுக்குப் பொருத்தமானவையாக இருப்பதோடு, தமது பொருளாதார ஆற்றல் வளங்களின் வளர்ச்சிக்கும், தமது சொந்த உற்பத்தி வசதிகளைத் தோற்றுவிக்கவும பங்களிக்கின்றன.

பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பானது, மூன்றும் உலகில் முக்கிய பொருளாதாரப் பிரிவுகளைத் தோற்றுவிக்கும் மார்க்கத்தைக் கொண்டதாகும். இவ்வாறு, சோவியத் யூனியன் அளித்துவரும் நிதியில் 90 சதவீதமானவை உற்பத்தித்துறைக்கும், இதில் 70 சத வீதத்திற்கும் அதிகமானவை தொழில்துறை மற்றும் மின் உற்பத்தியின் வளர்ச்சிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. தொழிற்பேட்டைகள், மின் இயக்கம், நீர்ப்பாசனம் மற்றும் ஏனைய திட்டங்களை நிர்மாணிக்கவும் அவற்றை நவீனப்படுத்தவும் இயற்கை வளங்களைக் கண்டறியவும், தேசிய ஆளணிகளைப் பயிற்றுவிக்கவும் சோவியத் யூனியன் பங்களிப்புச் செய்கின்றது.

பல்வேறு நிர்மாணத் திட்டங்கள் 115ஐக் கட்டுவதற்காக சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானிற்கு உதவிவருகின்றது. இவற்றில் 69 ஏற்கனவே இயங்கிவருகின்றன. சோவியத்—ஈராக் நட்புறவு, ஒத்துழைப்பு உடன்படிக்கை 100க்கதிகமான நிர்மாணத் திட்டக்களைச் சோவியத் உதவியுடன் கட்டுவதற்கு வகைசெய்கின்றது. இவற்றில் 40க்கும் அதிகமானவை ஏற்கனவே செயல்பட்டுவருகின்றன. தார்த்தார் – ஈஃபரேட்ஸ் கால்வாயின் முதல் பகுதி ஏற்கனவே திறக்கப்பட்டுவிட்டது. வடக்கு ரூகெய்லாவில் எண்ணெய் வயல்களை அபிவிருத்திசெய்ய சோவியத் நிபுணர்கள் உதவிவருகின்றனர். இது, ஆண்டொன்றுக்கு 420 லட்சம் தொன் எண்ணெய்யை உற்பத்திசெய்ய வகை செய்யும். இந்தியாவுக்கும் சோவியத்யூனியனுக்குமிடையிலான ஒத்துழைப்பும் வெற்றிகரமாக வளர்ந்துவருகின்றது. பொதுத்துறையைச் சேர்ந்த 70 மிகப்பெரிய தொழிலகங்களைக் கட்டுவதல் சோவியத் யூனியன் பங்கெடுத்துவருகின்றது. இந்திய இரும்பு மற்றும் உருக்குத் தொழில்துறைக்குத் தேவையான 80 சதவீதமான சாதனங்களையும், மின் சக்தி நிலையங்களுக்குத் தேவையான 60 சதவீத ஊதுலையையும், 30 சதவீத உருக்கையும் உற்பத்தி செய்வதற்கு சோவியத் பொருளாதார, தொழில்நுட்ப உதவியால் நிர்மாணிக்கப்பட்ட தொழிற்சாலைகள் உதவுகின்றன.

சோ.சோ கு. ஒன்றியத்திற்கும், ஆபிரிக்க நாடுகளுக்கு மிடையேபொருளாதார ஒத்துழைப்புவளர்ந்துவருகின்றது.

சோவியத் யூனியனின் பங்கெடுப்புடன் அல்ஜீரியாவின் பொதுத்துறையைச் சேர்ந்த 30 தொழிலகங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன, அல்லது புனர் நிர்மாணஞ் செய்யப்பட்டுள்ளன.

ஆண்டொன்றுக்கு 25 லட்சம் தொன் அலுமினியம் உள்ள மண் அகழ்வுப் பேட்டையை சோவியத் யூனியன் கினியாவுக்குக் கட்டிக்கொடுத்துள்ளது. கொங்கோ மக்கள் குடியரசில், சோவியத் யூனியன் பூகர்ப்பவியல் வளங்களை கண்டுபிடிப்பதில் பங்கெடுத்துவருகின்றது. நைஜீரியாவில் எண்ணற்ற பல நிர்மாணத் திட்டங்கள் கட்டி எழுப்பப்பட்டுவருகின்றன. ஆண்டுக்கு 13 லட்சம் தொன் உருக்கினை உற்பத்தி செய்யும் உலோக ஆலை ஒன்றுக்கான திட்டத்தை சோவியத் நிபுணர்கள் தயாரித்துவருகின்றனர். ஆண்டொன்றுக்கு 625000 தொன் கொள்வனவைக் கொண்ட எண்ணெய்பதனிடும் ஆலையை ஆஸாப்பில் கட்டிமுடிப்பதற்கு சோவியத் யூனியன் எதியோப்பியாவிற்கு உதவிவருகின்றது.

லத்தீனமெரிக்க நாடுகளுடனான வர்த்தகப் பொருளாதார உறவுகளில் அண்மைக் காலத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

தேசிய ஆளணிகளைப் பயிற்றுவிப்பது பொருளாதார ஒத்துழைப்பில் முக்கிய இடத்தை வகிக்கிறது. சோவியத் உதவியுடன், வளர்முக நாடுகளில் சுமார் 50 கல்வி நிறுவனங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன, சுமார் 60 கல்வி நிறுவனங்கள் நிர்மாணிப்பின் கீழ் உள்ளன. இவற்றின் மத்தியில், ஆப்கானிஸ்தான், கினி ஆகியவற்றில் பல்தொழில்நுட்பக் கழகமும், பர்மாவில் ரங்கூன் தொழில்நுட்பக் கழகமும், அல்ஜீரியாவில் எண்ணெய், வாயு, இரசாயனம் ஆகியவற்றுக்கான தேசியக் கழகமும், இந்தியாவில் பம்பாய்த் தொழில்நுட்பக் கழகமும் அடங்கும். எண்ணற்ற பல மூன்றும் உலக நாடுகளில், தேசியப் பொருளாதாரத்திற்கான தொழிலாளர்களைப் பயிற்றுவிக்கும் கல்விக்கேந்திரங்களை அமைக்க சோவியத் யூனியன் உதவிவருகின்றது. சோவியத் உதவியுடன் நிர்மாணிக்கப்படும் பல்வேறு திட்டங்களின் நிர்மாணத்தின்போதும், பின்னர் அவை செயல்படும்போதும்கூட தேசிய ஆளணிகள் பயிற்றுவிக்கப்படுகின்றனர். வளர்முக நாடுகளிலிருந்துவரும் எண்ணற்ற இளம் மக்கள் சோவியத் கழகங்களில் கல்வி பெறுவதோடு சோவியத் தொழிலகங்களில் நடைமுறை பயிற்சியையும் பெறுகின்றனர். இதுவரை சோவியத் யூனியன், வளர்முக நாடுகளுக்கு 500 000 தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களையும், நிபுணர்களையும் பயிற்றுவிக்க உதவியுள்ளது.



## வாய்ப்புகள்

மூன்றும் உலக நாடுகளுடன் சமத்துவம், பரஸ்பரம் பயன் அடிப்படையிலான சோவியத் யூனியனின் பொருளாதார ஒத்துழைப்பானது, உலகில் விமோசனமுற்ற நாடுகளுக்கான புதிய சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கின்றது. பொருளாதார சுதந்திரத்திற்காகவும்; ஏகாதிபத்தியத்தின் நிர்ப்பந்தம், கெடுபிடிக் கெதிராகவுமான போராட்டத்தில் அவை, சோவியத் யூனியனையும் ஏனைய சோஷலிஸ நாடுகளையும் நம்பியிருக்க முடியும்.

சோ. க. க வின் 25 வது காங்கிரஸ் (பெப்ரவரி மார்ச் 1976) வலியுறுத்தியதைப் போல், வளர்முக நாடுகளுடன், நியாயமான, ஜனநாயக ரீதியான, அடிப்படையில் தொடர்ந்து பொருளாதார மற்றும்ஏனையஒத்துழைப்புகளையும் வளர்க்கவும், அவற்றின் விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றத்தை உத்வேகப் படுத்தவும் சோவியத் யூனியன் தயாராக உள்ளது. நைரோபியில் நடைபெற்ற நான்காவது உங்டாட் கூட்டத் தொடரில், (மே 1976) வளர்முக நாடுகளுடனான வத்தகப் பொருளாதார ஒத்துழைப்புத் துறைகளில் ஸ்தூலமான நடவடிக்கை வேலைத்திட்டத்தை சோவியத் தூதுக்குழு முன்வைத்தது. தொழில் துறை மற்றும் ஏனைய தொழிகங்களை உருவாக்குவது முதல் விமோசனமுற்ற நாடுகள் தமக்கென விஞ்ஞான அடித்தளத்தை உருவாக்குவது, தொழில்நுட்பத்தை மாற்றுவது வரை பல்வேறு விரிவான பிரச்னைகளை அது உள்ளடக்கி இருந்தது. மூன்றும் உலகம் முகம் கொடுக்கும் பிரச்னைகளின் திட்டவட்டமான சிறப்பம்சங்களை இவ்வேலைத் திட்டம் முழுமையாகக் கணக்கிலெடுத்துக் கொண்டது.

விரிவானதும், பன்முகப்பட்டதுமான இவ்வேலைத்திட்டத்தின் நடைமுறைப் படுத்தல், ஆசிய, ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளின் சமூகப், பொருளாதார முன்னேற்றத்தை விரிவுபடுத்த உதவும்.

# வளரும் நாடுகளின் இன்றைய பிரச்னைகள்

★ வளர்முக நாடுகளில் பொதுத்துறை

வி. கொலேசோவ்

# வளர்முக நாடுகளில் பொதுத்துறை

அரசியல் சுதந்திரத்தை எய்துவதானது, பின்தங்கிய பொருளாதாரத்தைக் கடக்கின்றதும், பொருளாதார சுதந்திரத்தை வலுப்படுத்துவதுமான மிக முக்கிய கடமைகளை இளம் நாடுகளின் முன் வைத்துள்ளது. இப் பிரச்னைக்கான தீர்வில் மிகப்பெரும் பகுதியைப் பொதுத்துறையே வகிக்கிறது.

மூன்றும் உலக நாடுகள் தமது சுதந்திரமான வளர்ச்சிப் பாதையில் அழுத்துகின்றதும் சிக்கலானதுமான அரசியல், பொருளாதாரப் பிரச்னைகள் பலவற்றை எதிர்நோக்குகின்றன. பொருளாயத, நிதி மற்றும் ஏனைய வளங்களின் போதாமை, தேர்ச்சிபெற்ற ஆளணிகளின் போதாமை, உள்நாட்டுப் பிற்போக்குக்கும் தனது ஆதிக்கத்தை மீண்டும் பெற விழைகின்ற ஏகாதிபத்தியத்தின் முயற்சிக்கும் எதிராகப் போதியளவு தாக்குட்பிடிக்க முடியாமை என்பனவே இவையாகும். இந்தச் சூழ்நிலையில் அரசின் பொருளாதாரப் பாத்திரத்தை ஆழப்படுத்துவது தலையாய முக்கியத்துவமிக்க காரணியாகிறது. பொருளாதாரத்தில் அரசு சம்பந்தப்பட்டுக்கொள்வது விரிவான வாய்ப்புகளைப் பெற்றுவருகின்றது. அதனது செல்வாக்கு பொதுவாழ்வின் அனைத்து அம்சங்களிலும் வியாபித்து வருகின்றது.

## அரசும் பொருளாதாரமும்

ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் பலவற்றில் அரசே, நிதி, பொருளாயத மற்றும் உழைப்பு வளங்களை விடாமுயற்சியுடன் அணிதிரட்டி அவற்றைத் தேசியப் புனருத்தாரண நலன்களுக்காகவும், மக்களின் நல்வாழ்வையும் கலாசார மட்டத்தையும் செம்மையாக்கவும் பயன

படுத்திவருகின்றது. அது, பொருளாதார உறவுகளின் வளர்ச்சியை, நியாயமான, ஜனநாயக அடிப்படையில் இந்த உறவுகளைப் புனரமைக்க விழையும் நாடுகளுடன் நெறிப்படுத்துகின்றது, திசையமைவாக்குகின்றது.

இந்த முயற்சியினதும் பொருளாதார, சமூக, கலாசார வாழ்வில் அரசு வகித்த மிகப்பெரும் பாத்திரத்தினதும் பெறுபேறு, பொதுத்துறையின் எழுச்சியும் வளர்ச்சியுமேயாகும். இந்தப் பொதுத்துறையானது, வெளிநாட்டு ஏகபோகங்கள் வெளிநாட்டுத் தனியார் மூலதனங்கள் ஆகியவற்றிற்கோ அல்லது உள்ளூர் மூலதனத்திற்கோ சொந்தமாகவிருந்த தொழிலகங்களைத் தேசியமயமாக்கியதனால் மாத்திரமன்றி, புதிய தொழிலகங்களை நிர்மாணிப்பதன் மூலமும் உருவாக்கப்பட்டவையாகும்.

ஐ. நா. புள்ளிவிபரங்களின்படி, மூன்றும் உலக நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தியில் பொதுத்துறையின் பங்கு 10 சதவீதத்திற்கும் 55 சதவீதத்திற்கும் இடையில் வேறுபட்டதாக இருக்கிறது. கெமரோனிலும் ஈகுவடோரிலும் அது 20—25 சதவீதமாகவும், ஈரானில் 35 சதிவீதமாகவும் இருக்கிறது. துருக்கியில் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கும் பொதுத்துறையானது நாட்டின் மொத்தத் தொழிற்துறை உற்பத்தியில் ஏறத்தாழ அரைவாசியை உற்பத்தி செய்கின்றது. இந்தியாவில் 1975ம் ஆண்டின் தொடக்கத்தில் மின்சாரம், நிலக்கரி, இரும்புக் கலப்பற்ற உலோகங்கள், எண்ணெய்ப் பொருட்கள், புகையிரத சாதனங்கள் ஆகியவற்றின் உற்பத்தியில் முழுவதையும் அல்லது மிகப்பெரும் பகுதியைப் பொதுத்துறையே உற்பத்தி செய்தது; காப்புறுதி அமைப்பு முழுவதையுமே அது கட்டுப்படுத்திற்று. நீர்ப்டாசனத் துறையில் 52 சதவீதத்தையும் வங்கி வைப்புக்களில் 84 சதவீதத்தையும் சொந்தமாகக் கொண்டிருந்தது.

பொருளாதார சுதந்திரத்தை எய்துவதற்கான மிக முக்கியமான சாதனங்களில் ஒன்றாக பொதுத்துறையை வளர்முக நாடுகள் கருதுகின்றன. ஏனெனில், இப் பொதுத்துறையின் வளர்ச்சியானது, இந்த நாடுகளில் மேற்கத்தைய வல்லரசுகளினதும், ஏகபோகங்களினதும் ஊடுருவலுக்கான வாய்ப்பைக் குறைக்கிறது. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் ஏகாதிபத்திய விரோத இயக்கத்தில் பொதுத்துறையானது வலிமைமிக்க கருவியாகவும் பணிபுரிகிறது. சில நாடுகளின் அரசாங்கங்கள். தேசிய ஏகபோகங்கள் தோற்றம் பெறுவதற்கு எதிராக பொதுத்துறையைப் பயன்படுத்துகின்றன. இறுதியில் தனியார் தொழிலகங்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்குப் பொதுத்துறை பயன்படுத்தப்படுகின்றது.



# பொதுத் துறையும் அரசியல் அதிகாரமும்

எனினும்கூட, வளர்முக நாடுகளில் உள்ள பல்வேறு சமூக சக்திகள் தமது நலன்களுக்குப் பணியாற்றும் வகையில் பொதுத்துறையின் வளர்ச்சியைத் திசைதிருப்ப விழைகின்றன. முதலாளித்துவ வளர்ச்சியை ஆதரிக்கும் சக்திகள், தனியார் தொழில்துறை நலன்களுக்குப் பொதுத்துறை பணியாற்றவேண்டுமென விரும்புகின்றன. மேற்கத்தைய ஏகபோகங்களும், ஏகாதிபத்தியமும் இதேபோன்ற இலட்சியங்களையே பின்பற்றுகின்றன. சிலவேளைகளில் வெற்றி பெறுமலும் இல்லை. மேலும் உறுதியாகத் தம்மை அரண் செய்துகொள்ளும் பொருட்டு தேசிய அரசுகள் அல்லது உள்ளூர் முதலாளிகளின் பங்கேற்புடன கலப்புக் கம்பெனிகளை அமைக்கவும், மேற்குலகிற்கு இலாபம் தரும்வகையில் கிளைகளுக்குள் வெளிநாட்டு மூலதனத்தின் உட்பாய்வையும் உத்யேகப்படுத்துகின்றன.

முதலாளித்துவ போக்குகளைப் கடப்பதற்கான சாதனங்களை உள்ளடங்கியதாகவும், எதிர்காலத்தில் சோஷலிஸ சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்கு மாறிச் செல்வதற்கான அடித்தளத்தையிடும் நோக்கங்களுக்காக உற்பத்தியை ஒழுங்கமைக்கும், சமூக நிறுவனங்களைப் புனரமைக்கும் ஒரு வடிவமாகவும் பொதுத்துறையை ஜனநாயக மற்றும் முற்போக்கு வட்டாரங்கள் கருதுகின்றன.

அல்ஜீரியா, ஈராக், கினி, சிரியா, தன்ஸானியா போன்ற சோஷலிஸத் திசையமைவைக் கொண்ட நாடுகளில் பொதுத்துறையின் தொழில்துறை உற்பத்தி 50-80 சதவீதமானதாகும், அத்தோடு ஏனைய பிரிவுகளிலும் முன்னணி நிலைப்பாடுகளைப் பெற்றுள்ளன. இது, ஜனத்தொகையின் விரிவான பகுதியினரின் நலன்களில் பல்வேறான முற்போக்குச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு புரட்சிகர ஜனநாயகத்திற்கு உதவுகின்றது.

பொதுத்துறையின் இயக்கம் காரணமாக, சோஷலிஸத் திசையமைவைக்கொண்ட நாடுகள், முதலாளித்துவத் திசையமைவைக்கொண்ட நாடுகளைப் போலன்றி, மிகப் பெரிய தேசிய பூர்ஷ்வாக்களை, அடிக்கடி நடுத்தர தேசிய பூர்ஷ்வாக்களைக் கட்டுப்படுத்தவும் அகற்றவும் இட்டுச் செல்லும் சூழ்நிலையில் தனியார் மூலதனத்தை இடமமர்த்தும். இதைத் தொடர்ந்து, சுரண்டலுக்கான அடிப்படை பெருமளவிற்குச் சீர்குலைக்கப்பட்டு, சோஷலிஸ சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்கான முன்தேவைகள் தோற்றுவிக்கப்படுகின்றன. திட்டமிடல் அறிமுகஞ்செய்யப்படுகின்

006044.



றன, அரசுக்குச் சொந்தமான தொழிலகங்களை நிர்வாகஞ் செய்யும் போக்கில் உழைக்கும் மக்கள் ஈர்க்கப்படுகின்றனர். சோஷலிஸத் திசையமைவைக்கொண்ட நாடுகளில், தனியார் மூலதனமானது, பிரதானமாக மென்தொழில், விவசாயம், வர்த்தகம் ஆகியன சிறியதும் நடுத்தர அளவினதுமான வடிவத்திலேயே செயல்படுகின்றது. உதாரணமாக ஈராக்கில்; தனியார் மூலதனம் பிரதானமாக விவசாயத்திலேயே செயல்பட்டுவருகின்றது அதேவேளையில் தொழில் துறையில் கீழ்நிலையான பாத்திரத்தையே அது வகிக்கிறது. பொருளாதாரத்தில் முக்கிய பிரிவான எண்ணெய்த் தொழில் உட்பட, ஈராக்கின் தொழில்துறையில் நிர்ணயமான நிலைப்பாட்டினை பொதுத்துறையே வகித்துவருகின்றது. அல்ஜீரியாவில் தனியார் தொழிலகங்களை அரசு ஊக்கப்படுத்தும் அதேவேளையில் அதனது வளர்ச்சியையும் கட்டுப்படுத்துகின்றது.

சோஷலிஸத் திசையமைவைக்கொண்ட நாடுகளில் பொதுத்துறையின் வளர்ச்சியானது, பொருளாதார, அரசியல் சுதந்திரத்தை வலுப்படுத்துகின்றது, கடந்தகால காலனித்துவப் பிதுரார்ஜிதத்தைத் தகர்த்தெறியவும் வாய்ப்பேற்படுத்துகின்றது. இந்த நாடுகள் பொதுத்துறையைக்கொண்டிருக்கின்ற காரணத்தால் ஏகாதிபத்தியத்தின் அழுத்தங்களையும், நிர்ப்பந்தத்தையும், அநீதியையும் மேலும் தீவிரமாக எதிர்த்துநிற்கின்றன. உழைக்கும் மக்களின் நல்வாழ்வை உயர்த்துகின்றன.

## சோவியத் உதவி

வளர்முக நாடுகளின் பொதுத்தறையின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் சோஷலிஸ நாடுகளே பிரதானமாக, சோவியத் யூனியனே கணிசமான அளவுக்கு உதவியளித்துவருகின்றது .வளர்முக நாடுகளின் பொருளாதாரங்களில் மிக முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்ற நூற்றுக்கணக்கான தொழில்துறை, வலு மற்றும் ஏனைய நிர்மாணத் திட்டங்கள் இந் நாடுகளின் பொருளாதார சுதந்திரத்தை வலுப்படுத்துவதற்கு உதவுகின்றன, இவை சோவியத் உதவியினால் கட்டப்பட்டன, அல்லது கட்டப்பட்டுவருகின்றன. இதோ சில உதாரணங்கள்:

அராக் இயந்திரவியல் தொழிலகம், மேற்குலகிலிருந்து தனது உணவுத் தொழில்துறைக்குத் தேவையான இயந்திரங்களையும் சாதனங்களையும் இறக்குமதி செய்வதை ஈரான் குறைத்துக்கொள்ள வகைசெய்துள்ளது. ஈராக்கில் சோவியத் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள பண்ணை இயந்திர ஆலையானது, நாட்டிற்கு மிகவும் அவசியமாகத் தேவைப்படும் 13 வகையான விவசாய இயந்திர உபகர



ணங்களை உற்பத்தி செய்கின்றது. பண்ணை இயந்திரங்களில் சில வகைகளை இறக்குமதிசெய்வதை ஈராக் குறைத்துக்கொள்ளவும், ஏனையவற்றை இறக்குமதிசெய்வதை முற்றாக நிறுத்தவும் வகைசெய்துள்ளது.

எகிப்தில் சோவியத் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளதொழில்துறை நிறுவனங்கள் அத்தேசத்தினது பொதுத்துறையின்சிகரமாகவிளங்குவதோடு நாட்டின்தொழிற்துறை உற்பத்தியில் 10 சதவீதத்தை உற்பத்திசெய்கின்றன. 1970ம் ஆண்டில் அவை, 155 லட்சம் எகிப்திய பவுண்களை நிகர லாபமாகத் தந்தன. சோ.சோ.கு.ஒன்றியம் எண்ணெய் உற்பத்தித்திட்டங்களை சிரியா நிர்மாணித்துக்கொள்வதற்கு உதவியளிக்கிறது. சிரியாவின் பொருளாதார சுதந்திரத்தை வலுப்படுத்திக்கொள்வதற்கு எண்ணெய்த் தொழில் நிர்ணயமானதாகத் திகழ்கின்றது. சிரியாவில் எண்ணெய், வாயுவளங்களைக் கண்டுபிடிப்பதில் சோவியத் நிபுணர்கள் பங்கெடுக்கின்றனர். அலியான் என்ற இடத்திலுள்ள எண்ணெய் வளத்தை வர்த்தக ரீதியாக உற்பத்தி செய்வதற்கும் அவர்கள் உதவியளித்துள்ளனர். 1976ம் ஆண்டில், சிரியாவின் பொருளாதாரத்தில் லாபந்தரும் பிரிவான எண்ணெய்த் தொழிலை வளர்த்தெடுப்பதற்கு சோவியத் உதவி சம்பந்தமாக இரு நாடுகளும் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன. இந்த உடன்படிக்கை 1976—1980ம் ஆண்டுக்கு உட்பட்ட காலத்தை உள்ளடக்குகின்றது.

பொதுத்துறையையும் அதனது சமூகத் திசையமைவையும் வலுப்படுத்துவதானது, பொருளாதார முகாமையில் ஜனநாயக கோட்பாடுகளினதும், உழைக்கும் மக்களின் விரிவான பங்கேற்பினதும் வளர்ச்சியை உத்வேகப்படுத்துகின்றது.

பொருளாதாரச் சுதந்திரத்தையும் சமூக முன்னேற்றத்தையும் எய்துவதிலும், ஏகாதிபத்தியத்தையும் நவ-காலனித்துவத்தையும் தோல்விகாணச் செய்வதிலும் ஒரு முக்கியமான சாதனமாகவுள்ள பொதுத்துறையை இளம் நாடுகளைச் சேர்ந்த முற்போக்குச் சக்திகளும், தொழிலாளர் வர்க்கமும் வலுப்படுத்தி வருகின்றன.

மாஸ்கோ பல்கலைக்கழக செய்தி.
இலக்கம்: 3, 1977.

006044.

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பட்டது

## சோவியத் நாடு
## சோஷலிஸம்
## தத்துவமும் நடைமுறையும்

இம்மாத சஞ்சிகையைப்
பெற பின்வரும்
முகவரிக்கு எழுதுங்கள்.

'சோவியத் நாடு''
சோவியத் தூதரக செய்திப் பிரிவு,
27, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்த,
கொழும்பு-7.

27, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்த, கொழும்பு 7லுள்ளசோவியத் சோஷலிஸக் குடியரசுகள் ஒன்றிய ஸ்தானிகராலய செய்திப் பிரிவினருக்காக 91/15, கொட்டா ரோட், பொரளையிலுள்ள பிரகதி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.